
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ஈළනාඩු

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 15.08.2024 வியாழக்கிழமை இதழ் : 228 பக்கங்கள் : 12



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## ஜனாதிபதித் தேர்தல்:

# இன்று வேட்புமனுத் தாக்கல் 40 பேர் கட்டுப்பணம் கட்டினர்

## கொழும்பில் பாதுகாப்பு பலப்படுத்தல்

கொழும்பு, ஓகஸ்ட் 15

**ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர். இதேநேரம் இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்யவுள்ளனர்.**

நாட்டில் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. போட்டியிடும் வேட்பாளர்களுக்கான கட்டுப்பணம் செலுத்தும் கால எல்லை நேற்று புதன்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது. 40 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இன்று வியாழக்கிழமை காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை வேட்பாளர்கள் வேட்புமனுக்களை தாக்கல் செய்வார்கள்.

இதேநேரம், வேட்பு மனுக்கள் தொடர்பான ஆட்சேபனைகளை காலை 11 மணிமுதல் 11.30 மணி வரை செய்ய முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் சமன் சிறீ ரத்நாயக்கா தெரிவித்தார்.

இதனால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியல் இன்றைய தினம் இறுதியாகும். இதேநேரம், இதுவரை நடந்த 11

# பொது வேட்பாளர் பின்வாங்கமாட்டார்

### கூறுகிறார் சித்தார்த்தன் எம்.பி.

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் நிச்சயம் போட்டியிடுவார், கடைசி நேரத்தில் பின்வாங்கப்போவதில்லை என்று புளொட் தலைவரும், யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

அத்துடன், தமிழ் பொதுவேட்பாளர் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 11

# அரச தரப்பு சுதந்திர கட்சியினர் புதிய கூட்டணியை அமைத்தனர்!

கொழும்பு, ஓக. 15

நிமால் சிறீபால டி சில்வா தலைமையிலான சிறீலங்கா சுதந்திர கட்சியினர் புதிய அரசியல் கூட்டணியை அமைத்துள்ளனர்.

மக்கள் கூட்டணி (பொதுஜன எக்சத் பெரமுன) என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ள இந்தக் கூட்டணியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர் சன யாப்பா நியமிக்கப்பட்டுள்ளார். 11

# தபால்மூலமான வாக்களிப்பு செப். 4,5,6 ஆம் திகதிகளில்!

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதி தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4,5 மற்றும் 6 ஆம் திகதிகளில் நடத்துவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

குறித்த தினங்களில் தபால்மூலம் வாக்களிக்கத் தவறியவர்களுக்காக செப்ரெம்பர் மாதம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகள் மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# "செப். 22இல் பாராளுமன்றம் கலைக்கப்படும்"

கொழும்பு, ஓக. 15

எதிர்வரும் செப்ரெம்பர் 22ஆம் திகதி காலை பாராளுமன்றம் கலைக்கப்படும். இதற்கான சகல ஏற்பாடுகளும் தயார் நிலையில் 11

# ரணில் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட இடைக்காலத் தடை கோரி மனு தாக்கல்!

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் என தீர்ப்பளிக்குமாறு கோரி சட்டத்தரணி ஒருவர், உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனுவை சட்டத்தரணி ஷான் ரணசூரிய தாக்கல் செய்துள்ளார்.

ஜனாதிபதி வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறியுள்ளமையினால், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட ரணில் விக்கிரமசிங்க தகுதியற்றவர் என மனுதாரர் குற்றம் சுமத்தியுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் வேட்பாளராக போட்டியிட ரணில் விக்கிரமசிங்க தகுதியற்றவர் என இடைக்கால தடையுத்தரவொன்றை பிறப் பிக்குமாறு அவர் உயர் 11

# தமிழ்ப் பொது வேட்பாளரும் வேட்புமனுவில் ஒப்பமிட்டார்!

கொழும்பு, ஓக. 15

தமிழ்ப் பொது வேட்பாளரான பா. அரியநேத்திரன் நேற்று புதன்கிழமை வேட்புமனுவில் கையொப்பமிட்டார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளராக பா. அரியநேத்திரன் களமிறங்குகிறார். அவர் சார்பில் கடந்த திங்கட்கிழமை கட்டுப்பணம் செலுத்தப்பட்டது. இதைத் தொடர்ந்து, அவர் நேற்றைய தினம் வேட்புமனுவில் கையொப்பமிட்டார்.

தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரன் இன்றைய தினம் தேர்தல்கள் ஆணைக்குழு 11



# ரணில், நாமல், விஜயதாஸ வேட்புமனுக்களில் ஒப்பம்!

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நாமல் ராஜபக்ஷ, விஜயதாஸ ராஜபக்ஷ, திலித் ஜயவீர ஆகியோர் நேற்று புதன்கிழமை வேட்புமனுக்களில் ஒப்பமிட்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்றைய தினம் கொழும்பு - மலர் வீதியிலுள்ள தனது தேர்தல் பணிமனையில் வைத்து வேட்பு மனு பத்திரத்தில் கையொப்பமிட்டார்.

இந்த நிகழ்வில், பிரதமர் தினேஷ் குணவர்த்தன மற்றும் அமைச்சர்கள் ஆளும் தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதிக்கு நெருக்கமான 11

# வேட்பாளர்களுடன் பேரம்பேச இதுவே சரியான சந்தர்ப்பம்!

### சுமந்திரனிடம் கூறினாராம் சந்தோஷ் ஜா

கொழும்பு, ஓக. 15

"அதிகார பகிர்வு தொடர்பில் தென்னிலங்கை வேட்பாளர்களுடன் பேரம் பேசுவதற்கு இதுவே சரியான சந்தர்ப்பம்", என்று இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தன்னிடம் தெரிவித்தார் என்று சுமந்திரன் எம். பி. கூறியுள்ளார்.

அத்துடன், தமிழ் பொது வேட்பாளர் யார் என்றும் தன்னிடம் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா 11

# சம்பிக்கவின் ஆதரவும் சஜித் பிரேமதாஸவுக்கு!

கொழும்பு, ஓக. 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை வழங்க உள்ளதாக ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க அறிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் இணைந்துகொண்டமைக்கான உடன்படிக்கையும் நேற்று புதன்கிழமை கொழும்பில் 11

# ராஜபக்ஷ குடும்ப உறுப்பினர் ரணிலை ஆதரிப்பதற்கு முடிவு?

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதித் தேர்தலில் ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த ஒருவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு அளிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. வேட்பு மனு தாக்கல் செய்த கையோடு தேர்தல் பிரசாரத்தை ஆரம்பிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார். 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

"நான் ஜனாதிபதியானதும் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி தமிழ் மக்களின் அனைத்து பிரச்னைகளையும் தீர்ப்பேன்" - இதுவே நேற்றைய "ஈழநாடு"வின் தலைப்புச் செய்தி.

தன்னை சந்தித்த ரெலோ, புளொட் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்.

இது பற்றி அவர் குறிப்பிடுவது இது முதல் முறையல்ல, இதற்கு முன்னர் இரண்டாயிரத்து பத்தொன்பதாம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் அவர் இதுபோன்ற ஓர் உறுதிமொழியை வழங்கியவர்தான்.

தாங்கள் வெற்றிபெற்றால் இப்படிச் செய்வோம் என்று எதிரணியில் இருப்பவர்கள் சொல்வது வழமையானதுதான். ஆனால், கடந்த தேர்தலில் போட்டியிட்டபோது, தான் வெற்றி பெற்றால் செய்வேன் என்று சொன்ன விடயங்களை செய்வதற்கு வெற்றிபெற்றால் மாத்திரம்தான் முடியும் என்பதல்ல. எதிரணியில் இருக்கும்போதும் தான் வென்றால் செய்வேன் என்று சொல்லிய விடயங்களை செய்வதற்கு முயற்சி செய்திருக்க வேண்டும்.

அதிகம் ஏன், அதற்காக தொடர்ந்து குரல் கொடுத்தாவது வந்திருக்கவேண்டும்.

அது பற்றிய எந்தவித அக்கறையும் இல்லாமல் இருந்துவிட்டு, அடுத்த தேர்தலில் போட்டியிடும்போதும் அதனையே சொல்வது மக்களைத் திருப்திப்படுத்தாது என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்.

இவ்வாறுதான், இதற்கு முன்னதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இதே தமிழ் கட்சித் தலைவர்களை சந்தித்திருந்தார். அப்போது அவர், தான் மீண்டும் ஜனாதிபதியானால், எப்படி பதின்மூன்றை அமுல்படுத்தவிருக்கிறேன் என்பதற்கு வழிவரைபடம் ஒன்றை வழங்கியிருந்தார்.

பதின்மூன்றிலிருந்து எடுக்கப்பட்ட அதிகாரங்களை மீண்டும் கொண்டுவருவதற்கான சட்டமூலங்களை கொண்டுவருவேன் என்றும் மாகாண சபைகள் வினைத்திறனுடன் செயல்படுவதற்காக என்ன சட்டத்திருத்தங்களை செய்யவுள்ளார் எனவும் அவர் பட்டியலிட்டிருந்தார். நல்ல யோசனைகள்தான் - ஆனால், இதனை ஏன் இந்த இரண்டு வருடங்கள் ஜனாதிபதியாக இருந்தபோது நீங்கள் செய்திருக்கலாமே என்று அந்தச் சந்திப்பில் கலந்துகொண்ட கட்சிகளின் தலைவர்கள் கேள்வி எழுப்பினார்களா என்பது தெரியவில்லை. சமூக வலைத்தளங்களை கட்டுப்படுத்தும் புதிய சட்டத்தைக் கொண்டுவந்தபோது, அதற்கு எதிராக மகிந்த ராஜபக்ஷ கருத்துத் தெரிவித்திருந்தார். அதாவது, ராஜபக்ஷக்களின் ஆதரவுடன் ஆட்சியமைத்திருந்த போதிலும் தான் நினைத்த சட்டங்களையெல்லாம் கொண்டு வருவதற்கு எந்தவித தயக்கமும் காட்டாதவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அதுமாத்திரமல்ல, கடந்த இரண்டு வருடகாலத்தில் எழுபத்தி ஐந்து சட்டங்களை தனது அரசு நிறைவேற்றியதாக வேறு அவர் பெருமைப்பட்டிருந்தார். அவர் நினைத்திருந்தால், தான் வெற்றிபெற்றால் செய்கிறேன் என்று சொல்கின்ற அத்தனை விடயங்களையும் அவர் கடந்த இரண்டு ஆண்டுகள் அதிகாரத்தில் இருந்தபோதே செய்திருக்கலாம்.

இதுவல்ல, நாம் இன்று சொல்ல வருவது...

ரெலோ, புளொட் கட்சிகளுடனான சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ மற்றுமொரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

அதாவது, "தமிழ் பொதுவேட்பாளர் தேவையற்ற விடயம். இதனால் இலங்கை தீவில் இன ரீதியான முறுகல்கள் எழலாம்" - என்றும் சஜித் பிரேமதாஸ கூறியிருக்கிறார்.

இந்த நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்தபோது, அதற்கு கோட்டாபயமீது முழுப்பழியையும் போட்டுவிட்டு அனைத்து அரசியல்வாதிகளும் தப்பிக்கப் பார்த்தனரே தவிர, அதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்பதைப் பற்றி ஆராய்வதற்கு தயாராக இருக்கவில்லை. நாடு பல தசாப்தங்களாக எதிர்கொண்ட பெரும் யுத்தமும் - அதனால் ஏற்பட்ட செலவினங்களும் அந்த நெருக்கடிக்கு பிரதான காரணம் என்பதை ஏனோ அவர்கள் புரிந்தகொள்ள முயற்சிக்கவில்லை. அப்படி புரிந்துகொண்டிருந்தால் யுத்தம் தோன்றுவதற்கு காரணமான இனநெருக்கடிக்கும் தீர்வு காணவேண்டும் என்பதையும் புரிந்துகொண்டிருப்பார்கள்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டதும், பாராளுமன்றத்தில் பதின்மூன்றை அமுல்படுத்தவேன் என்று சொன்னதும் - பௌத்த துறவிகள் ஆயிரக்கணக்கில் பாராளுமன்றத்தை முற்றுகையிட்டபோது, யாரும் அதனைக் கண்டுகொள்ளவில்லை. அவர்களின் அந்தப் போராட்டம் நாட்டுக்கு எந்த வகையிலும் உதவப்போதில்லை என்பதை எதிர்க்கட்சித் தலைவரோ அல்லது முக்கிய தலைவர்களோ அதனைக் கண்டிக்கவேண்டும் என்றுகூட நினைத்ததில்லை.

ஆனால், இப்போது தமிழ் மக்கள் தமது பிரச்னைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை என்பதை இந்த நாட்டிலுள்ளவர்களுக்கு உரத்துச் சொல்வதற்காக இந்த ஜனாதிபதி தேர்தலை பயன்படுத்தவேண்டும் என்று நினைக்கின்றபோது, இன ரீதியான முறுகல்கள் தோன்றலாம் என்று எச்சரிக்கை விடுக்கின்றனர்.

இதற்கு முன்னரும் தமிழர் தரப்பிலிருந்தும் சிலர் இதேபோன்ற ஓர் அச்சுறுத்தலையே விடுத்தனர். அவர்களின் ஆலோசனையின் பேரில்தான் இவரும் அதே பல்லவியை பாடத் தொடங்கியிருக்கிறாரா என்பது தெரியவில்லை.

சிங்கள இனவாதத்தையே தமது மூலதனமாகக் கொண்டு அரசியல் செய்து வரும் விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகிய இனவாத அரசியல்வாதிகள் சிங்கள இனவாதத்தை முன்னிறுத்தி ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளரை களம் இறக்கலாம். அது இனங்களுக்கு இடையே முறுகல் நிலையை ஏற்படுத்தாது. ஆனால், தமிழ் மக்கள் தமது பிரச்னைகள் இன்னமும் தீர்க்கப்படவில்லை. அதுவும் இந்த நாட்டில் அவசியம் தீர்க்கப்படவேண்டிய ஒரு பிரச்னைதான் என்பதை ஒரு தேர்தல் மூலம் - ஜனநாயக முறைப்படி சொல்ல வந்தால் மாத்திரம், அது இனங்களுக்கிடையே முறுகலை ஏற்படுத்தும் என்பதும் ஒருவகையில் இனவாத கருத்துத்தான்.!

- ஊர்க்குருவி.

## நல்லூர் பெருந்திருவிழாவில் இன்று!

யாழ்ப்பாணம், ஒக. 15

நல்லூர் பெருந்திருவிழா நாட்களில் சிறீலசிறீ ஆறுமுகநாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5.30 மணி வரை கூட்டுப் பிரார்த்தனை நடைபெற்று வருகின்றது.

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில் நடைபெறும் இந்த நிகழ்வில் இன்று வியாழக்கிழமை கந்தரோடை ஓம் கந்தரோடை ஆலடி வீரகத்தி விநாயகர் பஜனை குழுவினரின் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ய. அநிருத்தனன் அறிவித்துள்ளார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 15

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழாவை முன்னிட்டு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் சிறப்பு நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடத்தி வருகின்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடத்தப்படும் இந்த நிகழ்வில் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் சிறப்பு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் இரண்டாவது குருமகா சந்நிதானம் சிறீலசிறீ சோமசுந்தர தேசிக ஞான சம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், அமெரிக்கா ஹவாய் சைவ ஆதீன சிவாய சுப்பிரமணிய சுவாமிகளின் சீடர் தொண்டுநாதன் சுவாமிகள் ஆகியோர் திருமுன்னிலை வகிக்க நிகழ்வு ஆரம்பமாகும்.

சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி ஒய்வு நிலை அதிபர் பிரம்மசிறீ வரதராஜசர்மா சிறீகாந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், சங்கானை பிரதேச செயலாளர் திருமதி கவிதா உதயகுமார் பிரதம அதிதியாகவும் ஊர்காவற்றுறை உதவிப் பிரதேச செயலாளர் திருமதி பிரணவசொரூபி சிவகரன், மூளாய் வதிரன்புலோ சிறீ சித்தி விநாயகர் ஆலய உபதலைவர் கார்த்திகேசு பார்த்தீபன் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில், மூளாய் ஞான ஒளி அறநெறி பாடசாலை, வட்டுக்கோட்டை கற்பக பிள்ளையார் அறநெறி பாடசாலை மாணவர்கள் கலை நிகழ்வுகளை வழங்கவுள்ளனர். விசேட நிகழ்வாக சைலஜாவின் இசைக்கச்சேரி நிகழ்வும் நடைபெறவுள்ளன என்று இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் ய. அநிருத்தனன் தெரிவித்துள்ளார். (ஐ)

## 'திரைக்கு வராத சங்கதி' நூல் வெளியீட்டு நிகழ்வு!



வடமராட்சி, ஒக. 15

எழுத்தாளரும் ஊடகவியலாளருமான சூ. ஏ. ரவிவர்மாவின் 'திரைக்கு வராத சங்கதி' எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் சிரேஷ்ட ஊடகவியலாளர் இ. பாரதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அறிமுக உரையை ஊடகவியலாளர் அ. நிக்சன் நிகழ்த்தினார். வெளியீட்டு உரையை யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊடக கற்கைகள் துறைத் தலைவர் திருமதி பூங்குழலி சிறிசங்கீர்த் தனன், ஜீவநதி சஞ்சிகையின் ஆசிரியர் க. பரணீதரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

முதல் பிரதியை நூலின் ஆசிரியரின் சகோதரிகள் பெற்றுக் கொள்ள அ.நிக்சன், இ. பாரதி, திருமதி பூங்குழலி ஆகியோர் வெளியிட்டு வைத்தனர்.

இந்த நிகழ்வில் பலர் பங்கேற்றனர். (ஐ-02)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஒக. 15

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தான சண்முகவிலாச மண்டபத்தில் சுக்கிரவார சிறப்பு சொற்பொழிவு சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெற்று வருகிறது.

நாளை வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவசிறீ இராஜேந்திர சுவாமிநாத குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத் தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார்.

இதைத் தொடர்ந்து சிறப்பு சொற்பொழிவை சைவப்புலவர் பொன். சந்திரவேல் "கேட்ட வரம் அருள்வாள் அம்பிகை" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

• • •

யாழ்ப்பாணம், ஒக. 15

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் சிறப்பு சொற்பொழிவு நடைபெறவுள்ளது.

18ஆவது தொடராக நடக்கும் இந்த சொற்பொழிவு தெல்லிப்பழை சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

மாணிக்கவாசகர் சுவாமிகளின் குரு வணக்கத்தை தொடர்ந்து சொற்பொழிவை சைவப்புலவர் ச. நவநீதன் "மாணிக்கவாசகரும் குயில் பத்தும்" என்னும் தலைப்பில் ஆற்றுவார். (ஐ)

## பெருந்திருவிழா

வடமராட்சி, ஒக. 15

நாகர்கோவில் வடக்கு முருகையா ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்தப் பெருந்திருவிழாவில், எதிர்வரும் 27 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவன திருவிழாவும் மறுநாள் புதன் கிழமை வசந்தோற்சவமும் அடுத்தநாள் வியாழக்கிழமை திருமண உற்சவமும் நடைபெறவுள்ளன.

தொடர்ந்து, 31 ஆம் திகதி சனிக்கிழமை சப்பை ரதத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த் திருவிழாவும் அடுத்தநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (ஐ-02)

## திருவிழாவில் நடன ஆற்றுகை!

யாழ்ப்பாணம், ஒக. 15

வரலாற்று பிரசித்தி பெற்ற பொன்னாலை வரதராஜ பெருமாள் ஆலய பெருந்திருவிழாவில் சகோபுர ரத சேவை (சப்பை ரதம்) திருவிழா இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தத் திருவிழாவில் இரவு 7 மணிக்கு ஆலய முன்றலில் கிருஷ்ணார்ப்பணம் நடன ஆற்றுகை நடைபெறவுள்ளது.

இந்த நடன ஆற்றுகையில் சந்திர பரத கலாலயத்தின் மாணவர்கள் மற்றும் அணிசெய் கலைஞர்கள் 135 பேர் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
15.08.2024 வியாழக்கிழமை

குரோதி வருடம், ஆடி 30

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# இந்தியா எதனை புரிந்து கொள்கின்றது?

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் தமிழ் அரசு கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரனை சந்தித்திருக்கின்றார். இந்த சந்திப்பு சுமந்திரனின் வேண்டுகோளுக்கு இணங்க நடைபெற்றதா அல்லது தூதுவரின் அழைப்புக்கு அமைவாக நடைபெற்றதா என்ற விவரங்கள் வெளிவரவில்லை. சுமந்திரன் சில தினங்களுக்கு முன்னர் இலங்கைக்கான சீனத் தூதுவரையும் சந்தித்துக் கலந்துரையாடி யிருந்தார். சீனத் தூதுவர் அழைத்திருந்தாரா அல்லது சுமந்திரனின் கோரிக்கையின் பெயரில் இடம்பெற்றதா - தகவல்கள் வெளியாக வில்லை.

இந்திய தூதுவரின் சந்திப்பின்போது, அவர் கூறினார் என்று ஊடகங்கள் சில விடயங்களை வெளியிட்டிருக்கின்றன. இனவாதம் தலையெடுக்காத இந்த சந்தர்ப்பத்தில்தான் அனைத்துத் தென்னி லங்கை வேட்பாளர்களுடனும் திறந்த மனதுடன் பேசலாம் - அனை வருடனும் திறந்த மனதுடன் பேசுங்கள். அவர்களின் கருத்துகளை அறியுங்கள் என்று தூதுவர் குறிப்பிட்டாரென செய்திகள் வெளியாகி யிருக்கின்றன. சீனத் தூதுவருடனான சந்திப்பைத் தொடர்ந்துதான் இந்திய தூதுவருடனான சந்திப்பு நடைபெற்றுள்ளது.

ஈழத் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வில் இந்தியாவின் பங்கு இன்றிமையாதது. இந்தியாவின் தயவும் கரிசனை யும் எப்போதும் தேவையானவை. எனவே, இதனை மீண்டும் இங்கு வலியுறுத்தி சொல்ல வேண்டியதில்லை. ஆனால், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னைக்கான தீர்வில் சீனாவின் பங்கு என்ன? அப்படியான ஓர் இடம் சீனாவுக்கு வரலாற்று ரீதியாக இருந்ததில்லை.

சீனாவை பொறுத்தவரையில் இலங்கை என்பது ஒரு பௌத்த பூமி (Land of Buddhism). இவ்வாறானதொரு பின்னணியில் தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்ளும் ஒரு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் எதற்காக சீனத் தூதுவரை சந்திக்க வேண்டும்? வடக்கு - கிழக்குக்குள் சீனா உள்நுழைவதை தாம் எதிர்ப்பதாக பல்வேறு சந்தர்ப்பங்களில் தமிழ் அரசுக் கட்சியினர் கூறியிருக்கின்றனர். அவ்வாறாயின், தேர்தல் காலத்தில் எந்த அடிப்படையில் சீனத் தூதுவரை சந்திக்க முடியும்?

ஒருவேளை தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்னை தொடர்பில்தான் சீனத் தூதுவருடன் பேசப்பட்டது என்றால் - என்ன பேசப்பட்டது? தமிழ் மக்களின் பிரச்னைக்குள் மூக்கை நுழைக்கும் வாய்ப்பை சீனாவுக்கு வழங்கினால் வடக்கு - கிழக்குக்குள் வாருங்கள் என்பதற்கான செங்கம்பளம் விரிக்கப்படுகின்றது என்பதுதானே அதன் பொருள். இந்த விடயத்தை இந்தியத் தூதரகம் எவ்வாறு புரிந்து கொள்கின்றது?


தமிழ்த் தரப்புகள் சீனத் தூதுவரை தேர்தல் காலத்தில் சந்திப்பதா னது சீனாவை வடக்கு - கிழக்குக்குள் வாருங்கள் - தமிழ் மக்களின் பிரச்னைக்குள் மூக்கை நுழையுங்கள் என்பதற்கான அழைப்பிதழ் தான். இவ்வாறான நகர்வுகளை மேற்கொள்பவர்களுக்கு இந்தியத் தூதரகம் முக்கியத்துவம் வழங்குமாயின் எதிர்காலத்தில் இன்னும் பலர் சீனத் தூதரகத்தை நோக்கிச் செல்வது தவிர்க்க முடியாமல் போகலாம். ஏனெனில், இந்தியா கோபித்துவிடக்கூடாது, என்னும் காரணத்தால்தான் வடக்கு - கிழக்கை சேர்ந்த பலரும் சீனத் தூ தரகத்திலிருந்து சற்று எட்ட நிற்கின்றனர். ஆனால், தற்போது வலிந்து சீனாவை நோக்கிச் செல்லும் சுமந்திரனுக்கு இந்தியத் தூதரகம் அதிக முக்கியத்துவத்தை வழங்குவதாகத் தெரிகின்றது. இன்றைய தமிழர் அரசியல் சூழலை பொறுத்தவரையில் - குறிப்பாக, தமிழ் அரசு கட்சிக்குள் சுமந்திரன் எதிர்ப்பு ஒரு பிரதான அரசியலாக இருக்கின்றது. இந்த நிலையில், சுமந்திரன் சீனத் தூதுவரை சந்தித்தமை ஒரு முன்னு தாரணமாக ஏனையவர்களும் எடுத்துக் கொள்ள அதிக வாய்ப்பு உண்டு.

நல்லூரான் திருவடி - 7

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தில் யோக சுவாமிகள்!

**விசுவாம்பா விசாலாட்சி மாதாஜி**
குப்பிழான்

அருளாளர்கள் தெய்வாம்சம் பொதிந்த தலங்களுக்கு காந்த சக்தியினால் ஈர்க்கப்பட்டதுபோல ஈர்க்கப்பட்டு விடுகி றார்கள். தெல்லிப்பழை வடலிக்கூடலில் இருந்த துர்க்கை அம்மன் ஆலயத்துக்கு பக்தர்கள் நிறையவே சென்று வழிபடுவது வழக்கம். துர்க்கை அம்மனின் அருளாட்சி வேகமாகப் பரவ ஆரம்பித்தது. யோகர் வாழ்ந்த காலத்தில் சிறிய ஆலயமாக துர்க்கை அம்மன் கோயில் இருந்தது. யோக ரும் அடிக்கடி அந்த ஆலயத்துக்கு சென்று வழிபாடு செய்வார். ஆலய புனருத்தாரண வேலைகள் நடப்பதையும் அவற்றை சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாகுட்டி நேரில் அவதானித்து வந்ததையும் யோகர் கண்டு கொண்டார். அப்போது தங்கம்மா அப்பாகுட்டியிடம் ஒருநாள், அவ்வால யத்தில் பன்னிரு திரு முறைகள் முற்றோ தலை வருடந் தோறும் நடத்திவந் தால் யாழ்ப்பா ணத்தில் மட்டுமல்ல, உலகளாவிய ரீதியில் துர்க்கை அம்மன் ஆலயம் சிறப்புற்று விளங்கும் என்று கூறினார்.



யோகரின் வழி காட்டலை ஏற்று தெல் லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்தை சிறப்புற புனருத்தாரணம் செய்து நிர்வகித் தார் தங்கம்மா அப்பாகுட்டி. இன்று உலகளாவிய ரீதியில் அந்த ஆலயம் பிரபல மாக இருந்து வருகின்றது. ஞானசுரபி என்ற மண்டபத்தை தனது சொந்த பொருட் செல வில் நிறுவி, ஒவ்வொரு சித்திரை சதயத்தி லும் பன்னிரு திருமுறைகளை முறைப்படி பாட வைத்து ஆடிச்சோதியில் பூரணப் படுத்திவந்தார் தங்கம்மா அப்பாகுட்டி. இதன்காரணமாக துர்க்கை அம்மன் ஆலயம் இன்று பக்தி பூர்வமாக உலகளாவிய ரீதியில் சிறப்புற்றுள்ளதைக் காணமுடியும்.


*1948*ஆம் ஆண்டு தொடக்கம் கிறிஸ்த வர்கள் வறுமைக்கோட்டில் இருப்போருக்கு கல்வி வசதிகளை வழங்கி வந்தனர். என்னை யும் கிறிஸ்தவ மதத்தில் சேரும்படி வற்புறுத்தினார்கள். *1956*ஆம் ஆண்டு என நினைக்கிறேன், சிவதொண்டன் நிலை யத்தில் சுவாமிகளை தரிசிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. என்னிடம் பிற சமயத்தவர்களை மதிக்காத தன்மை காணப்பட்டது. அத்துடன், சாதி பார்க்கும் குணமும் இருந் தது. ஒரு தடவை பஸ் வண்டியில் வரும் போது ஓர் இளம் பெண் மிகச்சிறிய குழந்தை யோடு அந்த பஸ் வண்டியில் ஏறினார். அப்பெண்ணின் ஏழ்மையை பிரதிபலிக்கும் விதத்தில் அழுக்கான ஆடையை அணித்தி ருந்தார். அவரைப் பார்க்க எனக்கு அருவருப் பாகவே இருந்தது. அவள் என்னருகே வந்து தனது குழந்தையை ஏந்துமாறு கேட்டாள். அப்பெண் அருவருப்பாக இருக்கலாம். ஆனால், அவள் கையிலிருந்த குழந்தையை ஏந்தாமல்விட்டால் இறைவன் என்மீது கோபிப்பார் என்று நினைத்தேன். பின்னர் எழுந்து அந்த பெண்ணுக்கு இடம் கொடுத்தேன். இச்சம்பவம் அன்று காலை ஆறு மணியளவில் நடந்தது.

யாழ்ப்பாணம் வந்து, சிவதொண்டன் நிலையத்துக்கும் வந்து விட்டேன். உள்ளே சென்று அங்கே அன்னதான சமையலுக்கு தயாராகியோருக்கு உதவினேன். அச்சமயம் யோகர் சிவதொண்டன் நிலையத்துக்கு வெளியே வந்துநிற்பதாக யாரோ சொன் னார்கள். நானும் மிக ஆவலோடு சுவாமியை சந்தித்து ஆசிபெறச் சென்றேன். "அப்போது யோகர் என்னை பார்த்து, "என்னடி சாதி, சமயம் பார்க்கிறாயா? யோசி, போடி போ" என்று உரத்த குரலில் ஏசினார்.

சுவாமி அவ்வாறு கூறியதும் சிந்தனை யில் ஆழ்ந்தேன். "சாதிகள் இல்லையடி பாப்பா" என்பது பாரதியார் பாடல். " இட் டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்" என்பது ஔவையார் கூறியது. இந்த மகா வாக்கியங்களை விரிவாக அச்சமயம் எண்ணி னேன். பின்னர் அக்கணமே சாதி, சமயம் பற்றி எண்ணுவதை அறவே கைவிட்டேன்.

**தொகுப்பு: அனந்த பாலகிட்ணர்**
(நாளை தொடரும்)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒகஸ்ட் - 15 வியாழக்கிழமை
குரோதி வருடம் - ஆடி 30
நல்ல நேரம் : 10.30 - 12.30
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : ஏகாதசி




மேடம்

சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான வேலைகளை கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வேலைச்சுமை மிகுந்த நாள்.

இடபம்

பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவுக் கிடைக்கும். உத்தியோகத்தில் தைரியமாக முடிவுகளை எடுப்பீர்கள். நன்மை கிட்டும் நாள்.

மிதுனம்

சமயோசிதமாக, சாதுரியமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். பதவி பொறுப்பு கிடைக்கும். வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும். அமோகமான நாள்.

கடகம்

குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். நட்பு வட்டம் விரியும். உத்தியோகத்தில் புது வாய்ப்புகள் தேடி வரும். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

சிம்மம்

திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் கணிசமாக உயரும். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் நிம்மதி கிட்டும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிட்டும்.

கன்னி

குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும்.

துலாம்

குடும்பத்தில் சந்தோஷம் நிலைக்கும். புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார். மனசாட்சி படி செயல்படும்.

விருச்சிகம்

ராசிக்குள் சந்திரன் இருப்பதால் மற்றவர்களை நம்பி வேலையை ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. பண விஷயத்தில் கறாராக இருங்கள். பேச்சில் இங்கிதம் தேவைப்படும் நாள்.

தனுசு

கணவன் - மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். சக ஊழியர்களுடன் விவா தம் வந்து நீங்கும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

மகரம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் ரசனையை புரிந்து கொள்வீர்கள். புது பொறுப்பை ஏற்பீர்கள். மதிப்புக் கூடும்.

கும்பம்

சொந்த பந்தங்கள் சிலர் கேட்ட உதவியை செய்வார்கள். சொன்ன சொல்லைக் காப்பாற்றத் துடிப்புடன் செயல்படுவீர்கள். புது அனுபவம் உண்டாகும். வியாபாரத்தில் சலுகைகளை அறிவிப்பீர்கள்.

மீனம்

கணவன் - மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். நன்மை நடக்கும் நாள்.


# பா. ஜ. க. அரசின் வளர்ச்சியடைந்த பாரத பயணத்துக்கு திராவிட மொடல் முக்கியம்

## தமிழக தொழில் துறை அமைச்சர் ராஜா

சென்னை, ஒக. 15

மத்திய பா. ஜ. க. அரசின் வளர்ச்சியடைந்த பாரதத்தை நோக்கிய பயணத்துக்கு திராவிட மொடலின் வளர்ச்சி மிகவும் முக்கியம்- இவ்வாறு தமிழக தொழில் துறை அமைச்சர் டி. ஆர். பி. ராஜா தெரிவித்துள்ளார்.

தமிழகத்துக்கு வரவுள்ள புதிய முதலீடுகளால் வேலை வாய்ப்புகள் அதிகரிக்கும் என்றும் அவர் கூறினார்.




சென்னையில் இந்திய தொழில் கூட்டமைப்பின் சார்பில் தமிழகத்தில் தொழில்துறையின் கீழ் குறுந்தொழில் முனைவோரை வலுப்படுத்துவது தொடர்பில் கருத்தரங்கு நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தமிழக தொழில்முனைவோர்களால் உருவாக்கப்படும் பொருட்கள் இந்தியாவிலே தரமிகுந்து காணப்படுகின்றன. நாம் மாநிலங்களுடன் போட்டி போடுவதில்லை. நாடுகளுடன் போட்டியிடுகிறோம் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (எ)

# “கல்வி மட்டுமே யாராலும் பறிக்க முடியாத சொத்து”

சென்னை, ஒக. 15

கல்விதான் ஒரு தலைமுறையையே முன்னேற்றிடும் ஆற்றல் பெற்றது. கல்விதான் யாராலும் பறிக்க முடியாத சொத்து என்று தமிழக முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தெரிவித்தார்.





சென்னை தலைமைச் செயலகத்தில் நகராட்சி ஆணையருக்கான பணி நியமன ஆணை பெற்ற துர்கா என்பவர் கூறும்போது, “தமிழக அரசின் அனைத்து சலுகைகளையும் பயன்படுத்தி படித்தாலே நாம் நல்ல நிலைக்கு உயரலாம். நான் அரசுப்பள்ளி, அரசுக் கல்லூரியில்தான் படித்தேன். என் தந்தை மன்னார்குடி நகராட்சியில் தூய்மைப் பணியாளராகதான் பணியாற்றினார். என் தந்தை நல்ல துணி போட்டதில்லை, என் வளர்ச்சிக்காக அவர் பலவற்றை இழந்தார். நல்ல உணவுகூட அவருக்கு கிடையாது. என் தந்தை, என் தாத்தா எல்லோரும் தூய்மைப் பணியாளர்களாக இருந்தார்கள். நான் இன்று நகராட்சி ஆணையாளர் ஆகியுள்ள நிலையில், இன்றில் இருந்து எங்கள் தலைமுறையே மாற்றம் காணப் போகிறது. இந்த வாய்ப்பை வழங்கிய அரசுக்கும், முதல்வருக்கும் நன்றி”- என்றார்.

இந்த நிலையில், இது தொடர்பில் முதல்வர் ஸ்டாலின் தனது சமூக வலைத்தளப்பதிவில், “நகராட்சி ஆணையராக பொறுப்பேற்கும் துர்காவின் பேட்டியை கேட்டு அகமகிழ்ந்தேன். கல்விதான் ஒரு தலைமுறையையே முன்னேற்றிடும் ஆற்றல் பெற்றது என்பதற்கு துர்கா எடுத்துக்காட்டு- எனத் தெரிவித்தார். (எ)

# எல்லை தாண்டக் கூடாது

## இந்திய கடற்படை அறிவிப்பு

இராமேஸ்வரம், ஒக. 15

இராமேஸ்வரம் மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடிக்கச் செல்லக் கூடாது என்று இந்திய கடற்படையினரால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழகத்தில் மீன்பிடித் தடைக் காலம் முடிவடைந்து கடந்த ஜூன் 15 ஆம் திகதியிலிருந்து இழுவைப்படகு மீனவர்கள் கடலுக்குச் சென்று வருகின்றனர். இந்த இரண்டு மாதத்தில் எல்லை தாண்டி மீன்பிடித்ததாக 11 இழுவைமடி படகுகள், 8 நாட்டுப் படகுகள் என 14 படகுகளை கைப்பற்றி அதிலிருந்த 122 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைது செய்தனர்.

இந்த நிலையில் இராமேஸ்வரத்தில் இந்திய கடற்படையின் சார்பில் மீனவர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதன்போது, “இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து கடலுக்குச் செல்லும் மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையில் எதுவும் அசம்பாவிதம் நடைபெறாமல் இருப்பதற்காக இந்திய கடல் எல்லையை தாண்டி மீன்பிடிக்க செல்லக்கூடாது. கடலுக்கு செல்லும் மீனவர்கள், மீனவர் அடையாள அட்டை ஆகியவற்றை எடுத்துச் செல்ல வேண்டும். கடலுக்குச் செல்வதற்கான அனுமதி பற்றுச்சீட்டுக்களை கட்டாயம் வாங்கிக் கொண்டு செல்ல வேண்டும்” என கடற்படையினரால் வலியுறுத்தப்பட்டது. (எ)

# தேர்தலில் தோல்வி; நீதிமன்றில் கையொப்பமிட்டார் ஓ. பி. எஸ்.

சென்னை, ஒக. 15

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலில் இராமநாதபுரம் தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்த ஓ. பன்னீர் செல்வம் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தேர்தல் வழக்கு தொடர்பான ஆவணங்களில் கையெழுத்திட்டார்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சி வேட்பாளர் நவாஸ்கனியிடம் சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தோல்வியடைந்தார். இதனையடுத்து நவாஸ்கனியின் வெற்றியை எதிர்த்து ஓ. பி. எஸ். சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கு தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை சரிபார்த்து கையெழுத்திடுவதற்காக, ஓ.பன்னீர் செல்வம் சென்னை உயர் நீதிமன்றத்துக்கு வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேந்தாங்குளம் கடற்கரையில் 3 மீன்பிடிப் படகுகள் தீக்கிரை!

### இரு குழுக்களிடையே மோதல் நிலை

யாழ்ப்பாணம், ஓக. 15

**இளவாலை, சேந்தாங்குளம் பகுதியில் இரண்டு குழுக்கள் இடையே ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து மூன்று படகுகள் தீ வைத்து எரிக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு படகு முற்றாகச் சேதமடைந்தது.**



சேந்தாங்குளம் கடற்கரையில் நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாய்த் தர்க்கம் மோதலாக மாறியதை அடுத்து, கடற்கரையில் இருந்த மீன் வாடி மற்றும் படகுகளுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது.

அதில் வாடிகள் சில எரிந்த நிலையில், மூன்று படகுகள் தீக்கிரையாகியுள்ளன.

படகுகள் மற்றும் வாடிகளுக்கு தீ வைக்கப்பட்டதை அடுத்து, மக்கள் ஒன்று கூடி, தீயை அணைத்ததுடன் சம்பவம் தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கு அறிவித்தனர்

இளவாலை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)



# டில்ஷான் சஜித்துக்கு ஆதரவு

கொழும்பு, ஓக. 15

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரும் சகலதுறை ஆட்டக்காரருமான திலகரத்ன டில்ஷான், ஆதரவளிக்க தீர்மானித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னவின் பதவி வெற்றிடத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பேருவளை அமைப்பாளராக முன்னாள் கிரிக்கெட் அணித்தலைவர் திலகரத்ன டில்ஷான் நியமிக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான நியமனக் கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று திலகரத்ன டில்ஷான் பெற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(அ)

# தோட்ட தொழிலாளர்களுக்கு அடிப்படை சம்பளம் ரூ. 1,700

### வர்த்தமானி நேற்று வெளியீடு

கொழும்பு, ஓக. 15

தேயிலை, இறப்பர் பெருந்தோட்ட தொழில்துறை தொழிலாளர்களுக்கான வேதனம் குறித்த வர்த்தமானி அறிவிப்பு சம்பள நிர்ணய சபையால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, நாளாந்த அடிப்படை சம்பளம் 1350 ரூபாயாகவும் உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவு 350 ரூபாயாவும் வழங்கப்படும் என்று அந்த வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(எ)

# ஜனாதிபதித் தேர்தல் 408 முறைப்பாடுகள்!

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய மேலும் 42 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அவற்றில் தேர்தல் சட்டம் மீறல் தொடர்பான 37 முறைப்பாடுகள் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் கடந்த ஜூலை 31 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் வரை ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 408 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை தேர்தல் சட்டம் மீறல் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(அ)

# வரலாற்றில் ரணிலே பொலிஸுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்!

### அமைச்சர் டிரான் அலஸ் கூறுகிறார்

கொழும்பு, ஓக். 15

"பொலிஸ் வரலாற்றில் ரணில் விக்கிரமசிங்கவே பொலிஸாருக்கு அதிக முக்கியத்துவத்தை வழங்கியுள்ளார்" என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சிறீஜெயவர்தனபுர விசேட அதிரடிப்படை நடவடிக்கை மையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன் தினம் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் டிரான் அலஸ் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

பொலிஸ் மா அதிபர் மற்றும் விசேட அதிரடிப் படைத் தளபதி ஆகியோருடன் சிங்கப்பூர் விஜயம் மேற்கொண்டிருந்த போது இவ்வாறானதொரு கட்டளை செயற்பாட்டு மையம்



தொடர்பில் நாம் கவனம் செலுத்தினோம்.

சிங்கப்பூர் அரசாங்கம் அத்தகைய கட்டளைச் செயல்பாட்டு மைய செயல்முறையை எங்களுக்கு விளக்கியது. இது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு அறிவிக்கப்பட்ட போது, இலங்கையிலும் அவ்வாறானதொரு கட்டளைச் செயல்பாட்டு மையம் ஒன்றை ஆரம்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது.

மேலும் அதற்காக இந்த இடம் விசேட அதிரடிப்படையினருக்கு வழங்கப்பட்டது. பொலிஸ் வரலாற்றில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே பொலிஸாருக்கு அதிக முக்கியத்துவம் வழங்கி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தார்.

கடந்த இரண்டு வருடங்களில் பொலிஸாருக்கான உணவு மற்றும் பராமரிப்புக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பயணக் கொடுப்பனவு உயர்த்தப்பட்டது. மேலும் பொலிஸாருக்கு 500 புதிய ஜீப் வண்டிகள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பணிகள் அனைத்தும் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் பின்னணியில் செய்யப்பட்டவை-என்றார்.

(அ)

# பாதாள உலகக் குழுக்களுக்கு எதிராக புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும்!

### கூறுகிறார் ஜனாதிபதி ரணில்



கொழும்பு, ஓக. 15

இலங்கையில் பாதாள உலகக்குழு செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையின் சிறீ ஜயவர்தனபுர விசேட அதிரடிப்படை நடவடிக்கை மையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பயங்கரவாதம், வன்முறை, வன்முறையை ஏற்படுத்தும் வகையிலான எதிர்ப்பு நடவடிக்கைகள், உட்பட பல்வேறு அவசரநிலைகளைக் கையாளும் பொறுப்பு இந்தப் பிரிவுக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் ஒழிப்புக்காக தற்போதுள்ள அனைத்து பொலிஸ், இராணுவ மற்றும் சிவில் நிறுவனங்களை ஒன்றிணைத்து போதைப்பொருள் தடுப்பு சட்டத்தின் கீழ் தனியொரு நிறுவனத்தை உருவாக்கி, அதற்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படும்.

பாதாள உலகக் குழுக்களுக்கோ அல்லது போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கோ நாட்டை அழிக்க இடமளிக்க முடியாது.

பாதாள உலகக் குழு செயற்பாடுகளுக்கு எதிராக புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி புதிய சட்டங்கள் கொண்டு வரப்படும்.

அத்துடன் சட்டம் மற்றும் ஒழுங்கு உறுதிப்படுத்தப்பட்ட நாடொன்றில் மக்களை வாழ அனுமதிப்பது அந்த மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஒரு நடவடிக்கையாகும்.

அதனைச் சட்டத்தில் உள்ளடக்குவதற்கு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)

# மனித பாவனைக்கு உதவாத பெருந்தொகை பருப்பு மீட்பு!

கொழும்பு, ஓக. 15

மனித பாவனைக்குப் பொருத்தமற்ற சுமார் ஒரு டன் பருப்பு, நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கொழும்பில் - புறக்கோட்டையில் உள்ள களஞ்சியசாலையொன்றில் நேற்று இடம்பெற்ற சோதனையொன்றின்போதே மனித பாவனைக்குப் பொருத்தமற்ற குறித்த பருப்பு கைப்பற்றப்பட்டது.

களஞ்சிய சாலையுடன் தொடர்புடைய வர்த்தகர், பருப்பை மீளப் பதப்படுத்தி சந்தைக்கு அனுப்பும் பணியில் ஈடுபட்டிருந்ததாக நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)

# மதுவரித் திணைக்களத்துக்கு 122 பில்லியன் ரூபா வருமானம்!

கொழும்பு, ஓக. 15

இந்த வருடத்தின் முதல் 7 மாதங்களில் மதுவரித் திணைக்களம் 122 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டியுள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் எம்.ஜே.குணசிறி தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

உரிமம் வழங்குவதன் மூலம் மாத்திரம் 1,500 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான வருமானம் கிடைத்துள்ளதாக எம்.ஜே.குணசிறி கூறினார்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தை மிரட்டும் முகமூடிக் கொள்ளையன்!

## தகவல் கோரும் பொலிஸார்

யாழ்ப்பாணம், ஓக. 15

**யாழ்ப்பாணத்தில் பல்வேறு பகுதிகளிலும் உள்ள வீடுகளுக்குள் புகுந்து தொடர் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த நபர் தொடர்பான சி.சி.ரி.வி காணொளிகளை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.**




யாழ்.மாவட்டத்தின் நல்லூர், மானிப்பாய், கோப்பாய் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் அண்மைக் காலமாக தொடர் திருட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக சைக்கிள்களில் வந்து பகலிலும் அதேபோன்று இரவு நேரங்களிலும் முகமூடிகள், கையுறைகள் அணிந்து அடையாளம் காண முடியாதவாறு வீடுகளுக்குள் உட்புகுந்து தொடர் திருட்டுக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன.

இத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்ற நிலையில் அவை தொடர்பில் தீவிர விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இவ்வாறான நிலைமையில் சில தினங்களுக்கு முன்னர் வீடொன்றிற்குள் புகுந்து திருடப்பட்ட சி.சி.ரி.வி காணொளிகளில் குறித்த நபரின் முகமூடி கழன்றிருப்பதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இதனால் குறித்த நபர் தொடர்பில் தகவல் தெரிந்தால் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு கேட்டுள்ள பொலிஸார், அவ்வாறு தகவல் கொடுப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படுமெனவும் அறிவித்துள்ளனர். (அ)

# மக்களுக்கு சேவையாற்றக்கூடிய தரப்பினருக்கு மட்டுமே பதவிகள்!

## சஜித் பிரேமதாஸ அறிவிப்பு



கொழும்பு, ஓக. 15

மக்களுக்காக முழுமையாக சேவையாற்றக் கூடிய தரப்பினருக்கு மாத்திரமே ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தின் போது பதவிகள் வழங்கப்படும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவளிக்கும் வகையில் 27 அரசியல் கட்சிகள் நேற்று முன் தினம் ஐக்கிய மக்கள் கூட்டணியுடன் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டன.

இந்த நிகழ்வில் கருத்துரைத்த போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மனிதாபிமானத்துக்கு முன்னுரிமையளித்து செயற்படும் அரசாங்கமே தற்போது அவசியமாகவுள்ளது.

முழு சுமையும் நாட்டிலுள்ள சாதாரண மக்களின் மீது சுமத்தும் வகையில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் உலக நாடுகளுடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன.

கடன் மறுசீரமைப்பு திட்டத்தில் முழுமையான சுமையும் சாதாரண பொது மக்கள் மீது வைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஐக்கிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தினால் இந்த விடயம் தொடர்பில் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடப்படும்.

மக்களின் ஆணையைப் பெறக்கூடிய கட்சி எது என்பதை சர்வதேச நாணய நிதியம் ஏலவே அறிந்து வைத்துள்ளது- என்றார். (அ)

# கல்விசாரா ஊழியர்கள் சங்கம் இன்று முதல் சட்டப்படி வேலை

கொழும்பு, ஓக. 15

இன்று முதல் சட்டப்படி வேலை செய்யும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக கல்விசாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போது அந்த சங்கத்தின் செயலாளர் அஜித். கே. திலகரத்ன இதனை கூறினார்.

தேசிய கல்விசாரா சேவை கொள்கைகளை உடனடியாக செயற்படுத்துவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென வலியுறுத்தி இந்த தொழிற்சங்க செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# வெளிநாட்டு சிகரெட்டுகளை விற்பனை செய்த நபர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 15

யாழ்ப்பாணத்தில் வெளிநாட்டு சிகரெட்களை விற்பனை செய்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டார்.

வெளிநாடுகளில் இருந்து சட்டவிரோதமான முறையில், வரிகள் செலுத்தப்படாது நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட சிகரெட்டுகளை விற்பனை செய்த குற்றச்சாட்டின் கீழே குறித்த பெண் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடம் இருந்து 240 சிகரெட்களை மீட்டுள்ளதாகவும், மேலதிக விசாரணைகளின் பின்னர் பெண்ணை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# பாடசாலை மாணவி கூட்டு வன்புணர்வு; அதிபர், ஆசிரியர்கள் மூன்று பேர் கைது!

கொழும்பு, ஓக. 15

தனமல்வில பொலிஸ் பிரிவில் பாடசாலை மாணவி ஒருவர் பலாத்காரம் செய்யப்பட்ட சம்பவம் தொடர்பிலான தகவல்களை அறிந்து பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்காமல் மறைத்த நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சிறுமி கல்வி கற்கும் பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர் மற்றும் இரண்டு ஆசிரியைகளே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனமல்வில பிரதான பாடசாலை ஒன்றில் 11 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவி அதே பாடசாலையை சேர்ந்த மாணவன் ஒருவனை காதலித்து வந்துள்ளார்.

இந்நிலையில், குறித்த காதலன் மாணவியை ஏமாற்றி தனது நண்பரின் வீட்டுக்கு அழைத்துச் சென்று, அங்கு முதல் முறையாக பாலியல் பலாத்காரம் செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

வீட்டில் இருந்த மேலும் சில மாணவர்கள் மாணவிக்கு மதுவை குடிக்க வற்புறுத்தி, துஷ்பிரயோகம் செய்து பாலியல் பலாத்காரம் செய்து வீடியோ பதிவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீடியோவை காட்டி மாணவர்கள் 2023 ஆம் ஆண்டு முதல் 7 தடவைகள் மாணவியைக் கூட்டுப் பலாத்காரம் செய்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இதில் சம்பந்தப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 17 எனவும் பொலிஸார் கூறினர்.

இந்நிலையில் கிரிந்தி ஓயாவுக்கு அருகில், 7 மாணவர்கள் சேர்ந்து மாணவியை கூட்டு பலாத்காரம் செய்து வீடியோ எடுத்துள்ளனர்.

இச்சம்பவம் குறித்த பாடசாலையின் அதிபர் உள்ளிட்ட ஒழுக்காற்று குழுவுக்கு தெரியவந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பாடசாலையின் அதிபர் மற்றும் ஒழுக்காற்றுக் குழுவினர், சம்பந்தப்பட்ட மாணவர்களையும் மாணவியையும் அழைத்து வந்து உண்மைகளை விசாரித்து, பாடசாலைக்கு களங்கம் விளைவிக்காத வகையில் சம்பவத்தை மூடி மறைத்துள்ளமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களில் தனமல்வில பிரதேசத்தைச் சேர்ந்த ஆசிரிய ஆலோசகர் ஒருவரின் மகனும் அடங்குவதாகவும், மாணவியின் தாயார் பாடசாலை ஆசிரியை என்பதும் தெரியவந்துள்ளது.

தனக்கு நடந்த இந்த கொடுமை மற்றும் வன்முறைகள் குறித்து மாணவி தனது வீட்டின் சுவர்களில் பல்வேறு ஓவியங்களை வரைந்துள்ளார்.

எனினும் இந்த சம்பவம் தொடர்பில் தனமல்வில பொலிஸ் நிலையத்துக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, மாணவியை பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய சந்தேகநபர்களான 17 மாணவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

# விஜயதாஸவை கைவிட்டு பிறிதொரு தரப்புடன் இணைகின்றார் மைத்திரி!

## அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் மைத்திரிபால சிறிசேன, விஜயதாச ராஜபக்ஷவை கைவிட்டு பிறிதொரு தரப்புடன் இணையவுள்ளார். அவர் கட்சியையும் சீரழித்து இறுதியில் விஜயதாஸ ராஜபக்ஷவையும் நெருக்கடிக்கு உள்ளாக்கியுள்ளதாக விவசாயத்துறை அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி லோரிஸ் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எமது அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில் எவருக்கும் குறை கூறிக்கொண்டிருக்க முடியும். ஆனால் அவற்றை அவர்களால் முறையாக முன் கொண்டு செல்லமுடியாது. எதிர்க்கட்சிகள் எமது வேலைத்திட்டத்தை ஆதரிக்காவிட்டாலும், அவற்றை சீர்குலைக்கும் வகையில் செயற்படாமல் இருந்திருக்கலாம்.

எனவே, பொய் வாக்குறுதிகளை நம்பி இனியும் மக்கள் ஏமாந்து விடக்கூடாது. ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடியவர் என்பதை மக்கள் தற்போது நேரடியாக உணர்ந்திருப்பார்கள். நாட்டு மக்கள் இம்முறைத் தேர்தலில் வெற்றி பெறுபவருக்கு அன்றி தோற்பவருக்கு வாக்களிக்க மாட்டார்கள்.

பிரதான வேட்பாளர்கள் இருவரைத் தவிர ஏனைய அனைத்து வேட்பாளர்களும் தமது கட்டுப்பணத்தை இழப்பர். வாக்குகளை சிதறடிப்பதற்காகவும் சிலர் போட்டியிடுகின்றனர். மேலும் சிலர் வேட்புமனு தாக்கல் செய்யாமல் வேறு தரப்பினருடன் இணைவர். சுதந்திர கட்சியின் முன்னாள் தலைவர் விரைவில் பிறிதொரு தரப்புடன் இணைவார்.

தற்போது அவர் விஜயதாசவை நெருக்கடிக்குள் சிக்க வைத்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிச்சயம் தேர்தலில் வெற்றி பெறுவார். அதனைத் தடுக்க முடியாது. 17ஆம் திகதியின் பின்னர் ரணிலுக்கான அலை வெளிப்படும்- என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு இரண்டாம் இடம்கூட கிடைக்காது

## டிலான் பெரேரா சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 15

**ஜனாதிபதியும் அவரது குழுவினரும் பட்டப்பகலில் தேர்தல் விதிமுறைகளை மீறுவதாக பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**



ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டாம் இடம் கூட கிடைக்காது என்றும் அவர் கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதான காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே பாராளுமன்ற உறுப்பினர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதியின் ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்காக அரச இயந்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அலுவலகம் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பணம், ஜனாதிபதியின் ஜனாதிபதித் தேர்தல் பணிகளுக்கு நேரடியாக பயன்படுத்தப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் பல நிறுவனங்களுக்கு முறைப்பாடு செய்ய உள்ளோம்.

எத்தனை சாக்குபோக்குகள் கூறினாலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வீட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வது இறுதியானது.

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இரண்டாம் இடம் கூட கிடைக்காது-என்றார். (அ)

# ரணில்-சஜித் இடையே கடுமையான போட்டி!

## எஸ்.பி. திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 15

ஜனாதிபதித் தேர்தல்கள யுத்தம் மிகவும் சூடுபிடித்துள்ளது டன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதாக பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க கூறுகிறார்.

மேலும், சிறீலங்கா பொது ஜன பெரமுன கட்சியில் இருந்து ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் முன்னாள் ஜனாதிபதியின் புதல்வர் நாமல் ராஜபக்ஷ, கடைசி நேரத்தில் வேட்புமனுவை சமர்ப்பிக்காமல் ஜனாதிபதித் தேர்தலில் இருந்து வெளியேறலாம் எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# ஜனக ரத்நாயக்க கட்டுப்பணம்

கொழும்பு, ஓக. 14

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக ரத்நாயக்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளார்.

**2024** ஜனாதிபதி தேர்தலில் எக்சத் லங்கா பொதுஜனவின் ஜனாதிபதி வேட்பாளராக ஜனக ரத்நாயக்க போட்டியிடவுள்ளார்.

ஜனக ரத்நாயக்கவின் சார்பில் கட்சியின் செயலாளர் நிஹால் பிரேமகுமார தேசப்பிரிய இராஜகிரியவிலுள்ள தேர்தல் ஆணைக்குழுவில் கட்டுப்பணத்தை செலுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)



# செஞ்சோலை படுகொலை; 18ஆவது ஆண்டு நினைவு

முல்லைத்தீவு, ஓக. 15

முல்லைத்தீவு-செஞ்சோலை வளாகத்தில் இராணுவ விமானப் படையினரின் வான் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்களுக்கான நினைவேந்தல் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

முல்லைத்தீவு-வள்ளிபுனம், இடைக்கட்டுப் பகுதியில் அமைந்துள்ள செஞ்சோலை வளாகத்தில் பயிற்சிக்காக சென்றிருந்த மாணவர்கள் மீது இலங்கை விமானப்படை நடத்திய தாக்குதலில் உயிரிழந்த 53 பாடசாலை மாணவர்கள் 53 பேர் மற்றும் பணியாளர்கள் 4 பேரினதும் 18ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு வான் தாக்குதல் இடம்பெற்ற இடத்தில் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

2006.08.14 அன்று வள்ளிபுனம்-இடைக்கட்டுப் பகுதியில் உள்ள செஞ்சோலை வளாகத்தில் விமானத் தாக்குதல் இடம்பெற்ற நேரத்தில் நேற்று நினைவேந்தல் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக சுடரேற்றி, அக வணக்கம் செலுத்தி மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த அஞ்சலி நிகழ்வில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர் குகன், இளைஞர்கள், பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (அ)

# நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் நீதி அமைச்சின் கடப்பாடுகள் முக்கியம்!

## நீதி அமைச்சர் அலி சப்ரி சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 15

சர்வதேச சமூகத்துடன் செயற்படும்போது நல்லிணக்க செயற்பாடுகள் மிகவும் அத்தியாவசியமாகும். அதேநேரம் நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் நீதி அமைச்சின் கடப்பாடுகள் முக்கியமாகும். அதனால் இந்த துறைகளின் செயற்பாடுகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்தார்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ள அலி சப்ரி, தனது கடமைகளை நீதி அமைச்சில் பொறுப்பேற்ற பின்னர் அமைச்சின் அதிகாரிகளுடன் கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்த கலந்துரையாடலின் போது அமைச்சின் செயற்பாடுகளின் முன்னேற்றங்கள் தொடர்பாக அவர் கேட்டறிந்ததுடன் இடை நடுவில் நிறுத்தப்பட்டிருக்கும் நீதிமன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்தல், சட்ட மறுசீரமைப்பு செயற்பாடுகள், டிஜிற்றல் மயமாக்கும் நிகழ்ச்சித்திட்டங்கள், நல்லிணக்கச் செயற்பாடுகள் மற்றும் இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் நடவடிக்கைகள் போன்ற துறைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்படவேண்டிய முறை தொடர்பில் ஆலோசனை வழங்கினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதேநேரம் விரைவாக நிறைவு செய்யப்படவேண்டிய நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படவேண்டும். வழக்கு விசாரணை செய்து முடிப்பது மாத்திரமல்ல, நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிப்பதில் நீதி அமைச்சின் கடப்பாடுகள் முக்கியமாகும்.

**2020** ஆம் ஆண்டில் இருந்து நீதி அமைச்சின் நடவடிக்கைகளை வேகமாக முன்னெடுத்துச் சென்றோம். விசேடமாக சர்வதேச சமூகத்துடன் செயற்படும்போது நல்லிணக்க செயற்பாடுகள் மிகவும் முக்கியமாகும் -என்றார். (அ)

# சட்டவிரோத மதுப் பாவனை நாட்டில் வெகுவாக அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 15

சட்டவிரோத மதுபான பாவனை அதிகரித்துள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் எம்.ஜே.குணசிறி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதன்படி 19 சதவீதத்திலிருந்த சட்டவிரோத மதுபான பாவனை தற்போது 30 சதவீதமாக அதிகரித்துள்ளதாக மதுவரித் திணைக்கள ஆணையாளர் கூறினார்.

அத்துடன் வரி அதிகரிப்பு மற்றும் சட்டவிரோத மதுபானம் காரணமாக மதுபானத்தின் விலை வேகமாக அதிகரித்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் அனைத்துலக இளையோர் நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஓக. 15

அனைத்துலக இளையோர் நாளைச் சிறப்பிக்கும் நிகழ்வுகள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நேற்று புதன்கிழமை ஒன்றுகூடலின்போது இடம்பெற்றன.

விசேடகல்வி நெறி ஆசிரிய மாணவி சாஜகான் பாத்திமா நுஸ்லா தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வுகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் விநோதினி சிறிமேனன் - இளையோரை வழிப்படுத்துவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு என்ற பொருளில் சிறப்புரை ஆற்றினார். கலாசாலையின் சிரேஸ்ட விரிவுரையாளர் சின்னையா மனோகரன் அதிதி அறிமுக வுரையை ஆற்றினார்.

ஆங்கில நெறி ஆசிரிய மாணவி டேவிட் லிஜானி



இளையோரும் சமூகமும் என்ற பொருளில் மாணவர் உரையை வழங்கினார். கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் நிறைவுரை ஆற்றினார். அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்ட சி. விநோதினி கலாசாலைச் சமூகத்தினரால் கௌர விக்கப்பட்டார். (அ)

# தென்மராட்சியில் சட்டவிரோதமாக மண் ஏற்றிச் சென்ற இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 15

தென்மராட்சி கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எழுதுமட்டுவாள் பகுதியில் சட்டவிரோதமாக மணல் ஏற்றிச்சென்ற இரண்டு டிப்பர் வாகனங்கள் கொடிகாமம் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் இருவர் கைது செய்யப்பட்டனர்.


கொடிகாமம் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைய கொடிகாமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரியான பிரதான பொலிஸ் பரிசோதகர் சிவலிங்கம் பிரபாகரன் தலைமையில் குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் கிளாலிப் பகுதியிலிருந்து கொடிகாமம் நோக்கி சட்டவிரோத மணலுடன் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனங்களே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்ட இரு சந்தேக நபர்களும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப் பட்டுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விகாரைக்கு காணி ஆக்கிரமிப்பு அதிகாரிகள் பார்வையிட்டனர்!



திருகோமணலை, ஒக. 15

**விகாரை அமைப்பதற்காக ஆக்கிரமிக்கப்பட்ட மக்களின் காணிகளை திருகோணமலை மாவட்ட அரச அதிபர், குச்சவெளி பிரதேச செயலர் உள்ளிட்ட அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிட்டு நிலைமைகளை ஆராய்ந்தனர்.**

திருகோணமலை - குச்சவெளியில் - இலந்தைக்குளம் 5ஆம் கட்டையில் கடந்தமாதம் 25ஆம் திகதி பிக்க ஒருவர் மக்களுக்கு சொந்தமான காணிகளை விகாரை அமைப்பதற்காக ஆக்கிரமித்து துப்பரவு செய்தார்.

இந்த விடயம் தொடர்பில் மக்கள் குச்சவெளி பிரதேச செயலரின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர். இதைத் தொடர்ந்து, இந்தத் துப்புரவு பணி இடைநிறுத்தப்பட்டது. இதைத் தொடர்நது, இந்த விவகாரம் உயர் அதிகாரிகளின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் திருகோணமலை மாவட்ட அரச அதிபர், குச்சவெளி பிரதேச செயலாளர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் அங்கு சென்று காணிகளை பார்வையிட்டனர். இதன்போது, மக்களின் ஆவணங்களையும் பரிசோதித்தனர். தொடர்ந்து, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், மற்றும் விகாராதிபதியுடனும் கலந்துரையாடி விரைவில் நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் உறுதியளித்தார்.

இலந்தைக்குளம் மக்கள் 1990ஆம் ஆண்டு போர் காரணமாக இடம்பெயர்ந்தனர். மீளக்குடியமர முயன்ற மக்களை அதிகாரிகள் அனுமதிக்கவில்லை. இந்த நிலையிலேயே விகாரை அமைப்பதற்காக அந்த மக்களின் காணிகள் அபகரிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# பத்தினிபுரம் கிராமத்தின் மயான பிரச்னைக்கு தீர்வு

தம்பலகாமம், ஒக. 15

திருகோணாமலை மாவட்டம் தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பத்தினிபுரம் கிராமத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் நேற்று முன்தினம் பயணம் மேற்கொண்டிருந்தார்.

நீண்ட காலமாக இந்து மயானம் இல்லாததனால் இப்பிரதேச மக்கள் பல்வேறு பிரச்னைகளை எதிர்நோக்கி வந்தனர்.

இதனை கிழக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு கொண்டு வந்ததன் பிரகாரம் பத்து நாட்களுக்குள் இந்தப் பிரச்னைக்குத் தீர்வு பெற்றுக் கொடுத்தார்.

குறித்த காணியை இந்து மயானமாக பயன்படுத்த முடியும் என்பதற்கான ஆவணத்தை ஆளுநர், பிரதேச மக்களிடம் கையளித்தார். (எ)



# மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு

நிந்தவூர், ஒக. 15

நிந்தவூர் அல் - மினா பாலர் பாடசாலை மாணவர்களின் சிறுவர் சந்தை நிகழ்வு பாடசாலையில் நடைபெற்றது.

அதிபர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நிந்தவூர் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எம். ஏ. எம். தாஹிர் கலந்து கொண்டார். சமூக செயல் பாட்டாளரும், ஹிக்மா விளையாட்டுக் கழகத்தின் தலைவருமான ஐ. எல். எம். ஜாபிர், இலங்கை தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட விரிவாக்கல் உத்தியோகத்தர் ஹாரூன் அம்ஜத் அலி, மாணவர்களின் பெற்றோர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

மாணவர்களால் சிறிய கடைத் தொகுதி அமைக்கப்பட்டு வியாபார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன் பிரதம விருந்தினரால் மாணவர்களுக்கு பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. (எ)

# அம்பாறையில் 6 மாணவர்கள் ஒரு மாணவன்மீது தாக்குதல்

கல்முனை, ஒக. 15

அம்பாறையில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவன் மீது அதே பாடசாலையைச் சேர்ந்த மாணவர் குழு தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் காயமடைந்த மாணவன் அம்பாறை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயர் தரத்தில் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கும் 6 மாணவர்களால் வணிக பிரிவு மாணவன் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

மேலும், தாக்குதலுக்குள்ளான மாணவனின் உடலில் சிறு காயங்கள் காணப்படுவதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. இந்தச் சம்பவம் தொடர்பில் அம்பாறை பொலிஸாரால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (எ)

# கனரக வாகனம் மோதி விவசாயி உயிரிழப்பு!

சாய்ந்தமருது, ஒக. 15

கனரக வாகனம் - மோட்டார் சைக்கிள் மோதி இடம்பெற்ற விபத்தில் விவசாயி ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

கல்முனையை நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த விவசாயி ஒருவர் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்துக்கு முன்பாக கனரக வாகனத்தில் மோதுண்டு பலியானார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் புதன்கிழமை காலை இடம்பெற்றது.

கல்முனை பிரதான வீதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் உயிரிழந்தவர் சம்மாந்துறை கைகாட்டி, கல்லரிச்சல் பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மட் றமீஸ் என அடையாளம் காணப்பட்டார். தனது வயலில் சிறுபோக வேளாண்மை அறுவடை இடம்பெறுவதால் நெல்லை உலர்த்தும் படங்குகளைப் பெறுவதற்காக கல்முனைக்கு செல்லும் வழியிலேயே இந்த விபத்தில் சிக்கினார்.

குறித்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# மருத்துவருக்கு பிரியாவிடை

கல்முனை, ஒக. 14

சுதேச வைத்திய திணைக்களத்தின் ஆணையாளராக கடமையேற்ற மருத்துவர் எம். ஏ. நபீல், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலிருந்து பிரியாவிடை பெற்றார்.



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஆயுர்வேத பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரியாக கடமையாற்றிய நபீல், சுதேச வைத்திய திணைக்களத்தின் ஆணையாளராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நிலையில், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் மற்றும் பிரிவுத் தலைவர்கள் ஏனைய உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் ஒழுங்கு செய்திருந்த பிரியாவிடை நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகீலா இஸ்ஸதீன் தலைமையில் பணிமனையில் நடைபெற்றது.

# பேருந்து - கப் மோதி விபத்து



கல்முனை, ஒக. 14

கல்முனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாண்டிருப்பில் கப்ரக வாகனமும், இலங்கை போக்குவரத்து சபை பேருந்தும் மோதி விபத்துக்குள்ளாகின.

இந்த விபத்து மட்டக்களப்பு - அக்கரைப்பற்று பிரதான வீதியில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றது. இதில் இரு வாகனங்களும் பலத்த சேதமடைந்தன.

இந்த விபத்து தொடர்பில் கல்முனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷேக் ஹசீனா பதவி விலகியதில் அமெரிக்காவுக்கு தொடர்பில்லை

## வெள்ளை மாளிகை விளக்கம்

வாஷிங்டன், ஒக. 15

**பங்களாதேஷ் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா பதவியை இராஜினாமா செய்த விவகாரத்தில் அமெரிக்காவுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்று வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.**




வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் கரீன் ஜீன் பியர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். “ஷேக் ஹசீனாவை அதிகாரத்தில் இருந்து அகற்றிய விவகாரத்தில் அமெரிக்க அரசாங்கம் ஈடுபட்டதாக எந்த அறிக்கைகள் அல்லது வதந்திகள் இருந்தாலும் - அவை அனைத்தும் தவறானவை. அது உண்மையல்ல. இது பங்களாதேஷ் மக்களின் ஒரு தெரிவு. பங்களாதேஷ் அரசாங்கத்தின் எதிர்காலத்தை பங்களாதேஷ் மக்களே தீர்மானிக்க வேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். எங்கள் மீது ஏதேனும் குற்றச்சாட்டுகள் எழுமானால் நிச்சயமாக நாங்கள் பதில் கூறுவோம். அந்த அடிப்படையிலேயே தற்போது நான் பதிலளித்துள்ளேன்”- என்றார்.

அமெரிக்காவின் சதியால் தான் ஆட்சியை இழந்ததாக ஷேக் ஹசீனா குற்றஞ்சாட்டியிருந்தார். “பங்களாதேஷத்துக்கு சொந்தமான செயின்ட் மார்ட்டின் தீவை தங்களிடம் ஒப்படைக்க அமெரிக்கா வலியுறுத்தியது. அந்தத் தீவை அமெரிக்காவுக்கு வழங்கியிருந்தால், ஆட்சியில் நீடித்திருப்பேன். ஆனால், பங்களாதேஷின் நலனுக்கு மட்டுமே முன்னுரிமை அளித்தேன். தற்போது அமெரிக்காவின் சதியால் ஆட்சியை இழந்துள்ளேன்” என்றும் ஷேக் ஹசீனா குற்றம்சாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)



# சீனாவில் 13 வயது சிறுமியின் பரதநாட்டிய அரங்கேற்றம்

பீஜிங், ஒக. 15

சீனாவில் 13 வயது லீ முசி என்ற சிறுமி பரதநாட்டிய கலையில் அரங்கேற்றம் கண்டு அனைவரையும் ஆச்சரியமடைய வைத்துள்ளார். தென்னிந்தியாவின் பாரம்பரிய நடனக் கலையான பரதநாட்டியத்தை சீனாவில் அந்த நாட்டின் குருவிடம் பயின்று, அங்கேயே அரங்கேற்றம் கண்டுள்ளார் லீ முசி.

இந்த அரங்கேற்ற நிகழ்வில் பிரபல பரதநாட்டிய நடன கலைஞர் லீலா சாம்சன் மற்றும் இந்தியப் பிரதிநிதிகள் சிலர் பங்கேற்றனர். வரலாற்று சிறப்பு மிக்க இந்த நிகழ்வை திரளான சீனர்களும் பார்த்து இரசித்தனர். (எ)

# வன்முறை வெறியாட்டங்கள் குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும்!

## பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஹசீனா

புதுடில்லி, ஒக. 15

“பங்களாதேஷில் போராட்டம் என்ற போர்வையில் வன்முறை வெறியாட்டச் சம்பவங்களே நடைபெற்றன. வன்முறையில் ஈடுபட்டவர்களையும், கொலைகளை செய்தவர்களையும் கண்டுபிடித்து உரிய விசாரணை நடத்தி தண்டிக்க வேண்டும்” என்று பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தெரிவித்துள்ளார்.



இடஒதுக்கீட்டுக்கு எதிராக வெடித்த பெரும் போராட்டங்களால் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா தனது பதவியை இராஜினாமா செய்துவிட்டு இந்தியாவில் தஞ்சமடைந்தார். அவர் இப்போது, இந்தியாவில் ஒரு பாதுகாப்பான இடத்தில் இருக்கிறார். அவர் எங்கு இருக்கிறார் என்பது இரகசியமாகவே உள்ளது.

இந்த நிலையில், அவருடைய மகன் சஜீப் வாசத்தின் எக்ஸ் சமூக வலைத்தளப் பக்கம் வாயிலாக ஷேக் ஹசீனா 3 பக்கங்கள் கொண்ட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கை வங்க மொழியில் உள்ளது. இந்தியாவில் தஞ்சம் புகுந்த பின்னர் பங்களாதேஷ் கலவரம் பற்றி ஷேக் ஹசீனா முதன்முறையாக அந்த அறிக்கையின் வாயிலாக மௌனம் கலைத்துள்ளார். இது பங்களாதேஷ் அரசியலில் முக்கியத்துவம் பெற்றுள்ளது. (எ)

# கமலாவுக்கு எலான் மஸ்க் அழைப்பு

வாஷிங்டன், ஒக. 15

அமெரிக்காவில் ஜனாதிபதித் தேர்தல் நவம்பர் மாதம் நடைபெறவுள்ளது. இந்த நிலையில், குடியரசு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பை எக்ஸ் தள உரிமையாளர் எலான் மஸ்க் நேர்காணல் செய்தார். இதனையடுத்து ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தெரிவில் முன்னிலையில் உள்ள கமலா ஹாரிஸூம் எக்ஸ் தள நேரலையில் பங்கேற்க வேண்டும் என்று எலான் மஸ்க் அழைப்பு விடுத்துள்ளார். (எ)

# செவ்வாய் கிரகத்தில் திரவ நிலையில் நீர்த்தேக்கம்


## கண்டுபிடித்தது நாசா

வாஷிங்டன், ஒக. 15

செவ்வாய் கிரகத்தில் திரவ நிலையில் நீர்த்தேக்கம் உள்ளதை நாசா கண்டுபிடித்துள்ளது.

நாசா விண்வெளி ஆய்வு மையம் செவ்வாய் கிரகம் தொடர்பில் தொடர்ந்தும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது.

இதன்படி நாசாவின் இன்சைட் லேண்டரால் நடத்தப்பட்ட ஆய்வில் செவ்வாய் கிரகத்தில் திரவ நிலையில் நீர்த்தேக்கம் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.



இந்த நீர்த்தேக்கம் கடலில் முழுக் கிரகத்தையும் உள்ளடக்கும் அளவில் இருப்பதாக தெரியவந்துள்ளது.

7. 2 முதல் 12. 4 கிலோ மீற்றர் வரையில் பாறைகளுக்கு இடையில் இத் திரவ நீர் தேங்கி நிற்பதாக ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (எ)

# கடும் வெப்பத்தால் 47,000 பேர் மரணம்

மட்ரிட், ஒக. 15

2023 ஆம் ஆண்டு ஐரோப்பாவில் கடும் வெப்பத்தால் தெற்கில் உள்ள நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இதனால் அங்கு 47 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்தனர் என்று ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா இன்ஸ்டிடியூட் பார் குளோபல் ஹெல்த் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு உலகிலேயே அதிகளவான வெப்பம் ஐரோப்பாவில் பதிவாகியுள்ளது.

கால நிலை மாற்றத்தால் தொடர்ந்து வெப்பநிலை அதிகரித்து வருவதால் உலகின் மிக வேகமாக வெப்பமடையும் கண்டத்தில் ஐரோப்பியர்கள் வாழ்வதோடு, உடல் ஆரோக்கியத்தில் பெரிய அளவிலான தாக்கங்களை எதிர்கொள்கின்றனர்.

35 ஐரோப்பிய நாடுகளில் முன்னெடுத்த ஆராய்ச்சியில் அதிக வெப்ப நிலையால் 47, 690 பேர் உயிரிழந்ததாக ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

அதில், கிரீஸ், பல்கேரியா, இத்தாலி மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளில் அதிகளவான உயிரிழப்புகள் பதிவாகின. (எ)

# இந்துக்களின்மீது யாரும் தாக்குதல் நடத்தக்கூடாது

## முகமது யூனுஸ் வேண்டுகோள்

டாக்கா, ஒக. 15

இந்துக்கள் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்று பங்களாதேஷ் இடைக்கால அரசின் தலைமை ஆலோசகர் முகமது யூனுஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஒகஸ்ட் 5ஆம் திகதிக்குப் பின்னர் பங்களாதேஷில் நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களில் சிறுபான்மையினரான இந்துக்கள் குறிவைத்து தாக்கப்பட்டனர். அவர்களின் வீடுகள், உடைமைகள், கோவில்கள் சேதப்படுத்தப்பட்டன.

இதனிடையே இந்துக்கள் மீதான தாக்குதலை கண்டித்து தலைநகர் டாக்கா மற்றும் சிட்டகாங்கில் மாபெரும் கண்டனப் பேரணி நடைபெற்றது. இதுவரை பங்களாதேஷத்தில் உள்ள இந்து மற்றும் இதர சிறுபான்மை சமூகத்தினருக்கு எதிராக 205 தாக்குதல் சம்பவங்கள் அரங்கேறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதில் 5 இந்துக்கள் உயிரிழந்தனர்.

இந்த நிலையில், “பங்களாதேஷ் மக்கள் அமைதி காக்க வேண்டும். போராட்டம், வன்முறையில் ஈடுபடக்கூடாது. யாரும் சிறுபான்மையினர் மீது தாக்குதல் நடத்தக் கூடாது. வன்முறை எதற்கும் தீர்வாக அமையாது. முதலில் எங்களது அரசு என்ன செய்கிறது என்பதை கணிக்க எங்களுக்கு கால அவகாசம் தாருங்கள்” என்று கோரிக்கை விடுத்துள்ளார். (எ)

# உக்ரைன் ஊருடுவி கடும் தாக்குதல் ரஷ்யாவில் அவசர நிலை பிரகடனம்

மொஸ்கோ, ஒக. 15

உக்ரைன் படையினரின் புதிய தாக்குதல்களைத் தொடர்ந்து ரஷ்யா தனது பெல்கொரொட் எல்லை பிராந்தியத்தில் அவசர கால நிலையை அறிவித்துள்ளது.

ரஷ்யாவுக்குள் ஊருடுவியுள்ள உக்ரைனிய படையினர் பல சதுர கிலோ மீற்றரை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்துள்ளதாக அறிவித்துள்ள நிலையிலேயே பெல்கொரொட் எல்லையில் ரஷ்யா அவசர நிலையை பிரகடனம் செய்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடிப்படை தேவைகளுக்கு தேவையான பணப் பெறுமதி மும்மடங்கு அதிகரிப்பு

கொழும்பு, ஒக. 15

**கடந்த ஒரு தசாப்த காலப்பகுதியில் ஒருவர் தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குத் தேவையான பணத்தின் பெறுமதி (வறுமை மட்டம்) மூன்று மடங்காக அதிகரித்துள்ளது.**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் அண்மையத் தரவுகளின் பிரகாரம் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய 2012 - 2013 காலப்பகுதியில் ஒருவர் தனது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 5,223 ரூபாய் போதுமானது என மதிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும் இவ்வாண்டு ஜனவரி மாதம் அந்தப் பெறுமதியானது 18, 350 ரூபாயாக உயர்வடைந்துள்ளது.

இதேவேளை, 2013 இல் 5,223 ரூபாயாகக் காணப்பட்ட இப்பெறுமதி 2016 இல் 6,117 ரூபாயாக அதிகரித்ததுடன் 2019 ஆம் ஆண்டு 6,966 ரூபாயாக மேலும் உயர்வடைந்தது.

அதேவேளை, 2022 ஆம் ஆண்டு நாட்டில் தீவிரமடைந்த பொருளாதார நெருக்கடியை அடுத்து பணவீக்கம் சடுதியாக பெருமளவால் அதிகரித்தது. இதன்விளைவாக ஒருவர் அவரது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்குத் தேவையான பணத்தின் பெறுமதி 15, 970 ரூபாயாக மிகையான அளவினால் அதிகரித்தது.

மேலும், இந்தப் பெறுமதி இவ்வாண்டு ஜனவரியில் 18, 350 ரூபாயாகவும், மே மாதத்தில் 17, 608 ரூபாயாகவும் உயர்வடைந்திருப்பதாக தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிவரத் திணைக்களத்தின் தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன. (எ)

# தனது தேர்தல் செயல்பாடுகளுக்காக அரச நிதியை பயன்படுத்தும் ரணில்!

## அநுரகுமார குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமது தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச நிதி மற்றும் அரச நிறுவனங்களைப் பயன்படுத்தி வருவதாகத் தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பலமிக்கதொரு அணியாக இந்த முறை தேர்தலில் போட்டியிடவுள்ளோம்.

எனினும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் கட்சிகளுக்கிடையே மாறி மாறி தேர்தலில் போட்டியிடவுள்ளனர்.

கட்சிகளுக்கிடையே உறுப்பினர்கள் மாறி மாறி செல்லும் அரசியல் கலாசாரம் மாற்றப்படவேண்டும்.

அதேநேரம், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தேர்தல் செயற்பாடுகளுக்காக அரச நிதியைப் பயன்படுத்துகின்றார்.


வாக்காளர்களுக்கு கையூட்டல் வழங்கும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன-என்றார். (அ)

# நாட்டின் நலனுக்காக ரணிலை ஜனாதிபதியாக்க வேண்டும்

## சொல்கிறார் ஆனந்தகுமார்

கொழும்பு, ஒக. 15

நாட்டின் எதிர்காலம் வளம்பெற வேண்டும் என்றால் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற வேண்டும். இல்லாவிட்டால் நாடு மீண்டும் பழைய நிலைக்கே செல்லும். மக்கள் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதியின் தொழிற்சங்க ஏற்பாட்டாளர் சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்தார்.



ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தாவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நாடு வீழ்ச்சியடைந்தபோது நாட்டை பொறுப்பேற்க யாரும் முன்வராத நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார். வீழ்ச்சியடைந்த நாட்டை மீட்டெடுக்கலாம் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அதற்கான வேலைத்திட்டமும் அவரிடம் இருந்தது. அதனால்தான் குறுகிய காலத்தில் நாட்டை இயல்பு நிலைக்கு கொண்டுவர முடியுமாக இருந்தது. கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் எதிர்கொண்டுவந்த துன்பங்களை மக்கள் மறந்துவிட முடியாது. ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அனுபவம், ஆளுமையாலே நாடு இந்த நிலைக்கு வந்திருக்கிறது என்பதை யாராலும் நிராகரிக்க முடியாது.

சஜித் பிரேமதாஸவோ, அநுரகுமார திஸாநாயக்கவோ ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால், நாடு மீண்டும் வீழ்ச்சியடைந்து, கோட்டாபய ராஜபக்‌ஷவுக்கு ஏற்பட்ட நிலையே ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

# 3 சீனப் பெண்களின் பொருட்கள் திருட்டு

மாத்தறை, ஒக. 15

இலங்கைக்கு சுற்றுலா வந்த மூன்று சீனப் பெண்களிடமிருந்து பெறுமதியான பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக கிரிந்த பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மூன்று இலட்சம் ரூபாய் பணம் மற்றும் ஐந்து இலட்சம் ரூபாய் பெறுமதியான கமெரா உள்ளிட்ட பெறுமதியான பொருட்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இந்த சீனப் பெண்கள் மூவரும் சுற்றுலாவுக்காக இலங்கை வந்துள்ள நிலையில் திஸ்ஸமஹாராமை, கிரிந்த பிரதேசத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தனர். இதன்போதே மேற்படி திருட்டுச் சம்பவம் அரங்கேறப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிரிந்த பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# பள்ளத்துக்குள் பாய்ந்தது ஜீப்!

## சாரதி படுகாயம்

தம்புள்ளை, ஒக. 15

ஜீப் வாகனம் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்துடன் மோதி பள்ளத்துக்குள் பாய்ந்து விபத்துக்குள்ளானது.

தம்புள்ளை - பக்கமூன வீதியில் 14 ஆவது மைல்கல் அருகில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற இந்த விபத்தில் ஜீப் வாகனத்தின் சாரதி படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (எ)

# பிழையான தீர்மானம் எடுத்தால் பாதிப்பை எதிர்நோக்க நேரிடும்

## மக்களை எச்சரிக்கிறது ஐ. தே. க.

கொழும்பு, ஒக. 15

ஊடகப் பிரசாரங்களையும் அனுபவமில்லாத அரசியல்வாதிகளின் பொய் வாக்குறுதிகளுக்கும் மக்கள் ஏமாந்துவிடக்கூடாது. தேர்தலில் மக்கள் பிழையான தீர்மானம் எடுத்தால் அதன் பெறுபேற்றை மக்களே அனுபவிக்க நேரிடும். அதனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கு இன்னும் ஐந்து வருடங்களுக்காவது சந்தர்ப்பம் வழங்க மக்கள் தீர்மானிக்க வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் உபதலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார்.

ஐ. தே. க. தலைமையகமான சிறிகொத்தாவில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை மீட்டெடுத்து, முன்னெடுத்துச்செல்லும் சந்தர்ப்பத்தில் மிகவும் தீர்மானமிக்க தேர்தலுக்கு முகம்கொடுத்துள்ளோம். நாட்டை தொடர்ந்து முன்னெடுத்துச்செல்ல யார் பொருத்தம் என்பதை தெரிவு செய்வதற்கு தற்போது மக்களுக்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.

நாட்டின் ஜனாதிபதியை தெரிவு செய்வதில் கடந்த காலங்களில் பல சந்தர்ப்பங்களில் மக்கள் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் தீர்மானம் எடுத்திருந்தார்கள். கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் மக்கள் பிழையான ஒருவரை தெரிவுசெய்ததன் மூலம் நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றது.

அதனால் இந்த ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் வேட்பாளரின் பிரபல்யம், ஊடகப் பிரசாரம், பொய் வாக்குறுதிகளை நம்பி ஏமாந்துவிடாமல், வீழ்ச்சியடைந்திருந்த நாட்டை ஸ்திர நிலைக்கு கொண்டுவந்துள்ள ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க வேண்டும்- என்றார். (அ)

# தனிக் குடும்பங்களுக்கும் அஸ்வெசும கொடுப்பனவு



கொழும்பு, ஒக. 15

பெருந்தோட்டப் பகுதிகளில் லயன் அறைகளில் வாழ்கின்ற தோட்டத் தொழிலாளர் குடும்பங்களுக்கு அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவுகளை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதாவது ஒரே வீட்டில் வாழும் உப குடும்பங்களுக்கும் இந்தக் கொடுப்பனவுகளை வழங்கும் தீர்மானத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

# நச்சு வாயுவை சுவாசித்த இருவர் பரிதாபமாக பலி!

கொழும்பு,ஒக. 15

கொழும்பு, மாலபே, கஹந்தோட்டை பகுதியிலுள்ள குடியிருப்பு ஒன்றில் இரசாயன நச்சு வாயுவை சுவாசித்த இருவர் உயிரிழந்தனர்.

இருவரும் சில இரசாயனங்களை கலக்க முயன்றபோது வெளிவந்த நச்சு வாயுவை சுவாசித்ததால் பரிதாபமாக பலியாகினர்.

மொனராகலை மற்றும் கஹந்தோட்டை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 45 மற்றும் 63 வயதுடைய இருவரே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் கூறினர்.

இவர்களது சடலங்கள் கொழும்பு தேசிய மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மாலபே பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று...

ஜனாதிபதித் தேர்தல்களில் அதிக வேட்பாளர்கள் போட்டியிடும் தேர்தலாகவும் - நீண்ட வாக்குச்சீட்டு கொண்ட தேர்தலாகவும் இந்தத் தேர்தல் அமையவுள்ளது.

இன்றையதினம் வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு வேட்பாளர்கள் தேர்தல்கள் திணைக்களம் அமைந்துள்ள இராஜகிரியவில் அமைந்துள்ள தேர்தல்கள் பணிமனைக்கு வருகைதரவுள்ளனர். இதையொட்டி அந்தப் பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன், அந்தப் பகுதியில் போக்குவரத்தும் தடை செய்யப்பட்டு மாற்று ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ஐ)

## தமிழ்...

பணிமனைக்கு சென்று வேட்பு மனுவை தாக்கல் செய்வார். அவருடன், தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் க. வி. விக்னேஸ்வரன் எம்.பியும் செல்வார் என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

## ரணில்...

நீதிமன்றத்திடம் மனுவின் ஊடாக கோரிக்கை விடுத்துள்ளார்.

பொலிஸ் திணைக்களத்துக்கு பதில் பொலிஸ் மாஅதிபர் ஒருவரை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு உத்தரவொன்றை பிறப்பிக்குமாறும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மனுவின் பிரதிவாதிகளாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதி சார்பில் சட்ட மாஅதிபர் மற்றும் சட்ட மாஅதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்.

உயர்நீதிமன்றத்தினால் பொலிஸ் மாஅதிபராக கடமையாற்ற தேசபந்து தென்னக்கோனுக்கு இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், பதில் பொலிஸ் மாஅதிபர் ஒருவரை நியமிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது.

எனினும், தான் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களமிறங்கி யுள்ளமையினால், பதில் பொலிஸ் மாஅதிபர் ஒருவரை நியமிக்க முடியாது என ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளதை சுட்டிக் காட்டியுள்ள மனுதாரர், நீதி அமைச்சர் பதவிக்கு அலி சப்ரியை நியமித்துள்ளதை மனுவில் குறிப்பிட் டுள்ளார்.

இந்த நடவடிக்கையின் ஊடாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வேண்டுமென்றே அரசியலமைப்பை மீறியுள்ளதுடன், தனது அதிகாரத்தை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியுள்ளதாக மனுதாரர் கூறியுள்ளார். (அ)

## பொதுவேட்பாளர்...

செயற்படுகின்றார் என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளையும் அவர் நிராகரித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் இந்திய தரப்பில் நேரடியாக எவ்வித கருத்தும் முன்வைக்கப்படவில்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் இது உங்களின் உள்பிரச்சினை என்ற நிலைப்பாட்டிலேயே உள்ளனர், இது பற்றி நாங்கள் கேட்டபோதுகூட அந்த பதிலே வந்தது. என்னிடம் எவ்வித கருத்தும் கூறப்படவில்லை. வேறு தரப்பினர்களிடம் கூறினார்களா என தெரியாது.

தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பில் ஆராய்வதற்கு, பணிகளை முன்வைப்பதற்கு குழுவொன்று உள்ளது, அந்த குழுவால் விரைவில் அதற்குரிய பணி செய்து முடிக்கப்படும். எமது பிரச்னை தீர்க்கப்படவில்லை, அது இன்னமும் கொதிநிலையிலேயே உள்ளது என்பதை தென்னிலங்கைக்கும், உலகுக்கும் காட்டவே தமிழ் பொதுவேட்பாளர் களமிறக்கப்பட்டுள்ளார் - என்றார். (அ)

## வேட்பாளர்களுடன்...

கேட்டறிந்தாராம் என்றும் மேலும் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவை நேற்று சந்தித்துப் பேசினார். கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நடந்த இந்த சந்திப்பு நடைபெற்றது.

இந்த சந்திப்பில், 13ஆவது திருத்த சட்டம் நடைமுறை தொடர்பில் மூன்று பிரதான வேட்பாளர்களும் கூறி வருகினறனர் என்றும் 13இல் நடைமுறைப்படுத்தப்படாதிருக்கும் விடயங்களை நடைமுறையாக்குவது தொடர்பில் ஜனாதிபதியுடனான சந்திப்பில் அவருக்கு தான் எடுத்துக் கூறினார் எனவும் இந்தியத் தூதுவருக்கு சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

சுமந்திரனுக்கு கருத்துரைத்த இந்தியத் தூதுவர், "இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களில் யாரை ஆதரிப்பது எனத் தீர்மானிப்பதற்கு முன்னர் அதிகாரப் பகிர்வை முழுமையாக நடைமுறைப்படுத்துவதுடன் அதற்கு அப்பால் செல்வது குறித்து சகல வேட்பாளர்களுடனும் பேரம் பேசுவது சிறந்த அணுகுமுறை. இவ்வாறான சந்தர்ப்பங்களிலேயே அவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பதால் இந்த பேரம் பேசலை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். இதன் பின்னர் சிறந்த தீர்வுத்திட்ட முன்மொழிவை முன்வைப்பவரை ஆதரிப்பது குறித்து தீர்மானிக்க முடியும்" - என்று கூறினார்.

இதேவேளை இந்த முறை ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சார்பில் களமிறக்கப்பட்டிருக்கும் பொது வேட்பாளர் யார் என சுமந்திரனிடம் கேட்டறிந்த இந்தியத் தூதுவர், "தற்போ தைய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பேரம் பேசுமாறுதான் ஏனைய கட்சிகளுக்கும் தான் ஆலோசனை வழங்கியிருக்கிறார்", என்றும் கூறினாராம் என்று என்று சுமந்திரன் எம். பி. தெரிவித்தார். (ஐ)

## செப்.22..

இருக்கின்றன என்று தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

"தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் உறுதியாக வெற்றிபெறுவார். அவர் ஜனாதிபதியாக தெரிவானதும் முதல் பணியாக பாராளுமன்றம் மறுநாள் கலைக்கப்படும்.

ஊழல்வாதிகள், திருடர்கள், குண்டர்கள் நிறைந்த பாராளுமன்றம் கலைக்கப்பட்டு புதிய பாராளுமன்ற பிரதிநிதிகளை உருவாக்கும் சந்தர்ப்பம் மக்களுக்கு வழங்கப்படும்." - என்று நேற்று நடந்த மக்கள் சந்திப்பில் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

## அரச...

இதன் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றது. இதில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சுதந்திர கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பௌத்த தேரர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை மையப்படுத்தியே இந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சம்பிக்கவின்...

கைச்சாத்திடப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சம்பிக்க ரணவக்க ஆதரிப்பார் என பல்வேறு கருத்துகள் கடந்த காலத்தில் வெளியாகியிருந்தன. என்றாலும், நேற்று தமது ஆதரவு சஜித் பிரேமதாஸவுக்கே என சம்பிக்க ரணவக்க அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளார். (அ)

# மன்னாரில் இளம் தாய் மரணம்: நால்வர் தற்காலிக பணிநீக்கம்!

மன்னார், ஓக. 15

மன்னார் மருத்துவமனையில் இளம் தாயான சிந்துஜா உயிரிழந்த விவகாரம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணையின் அடிப்படையில், தாதிய உத்தியோகத்தர்கள் இருவரும் மருத்துவ மாதுக்கள் இருவரும் நேற்றுமுன்தினம் முதல் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மருத்துவமனையில் கடந்த மாதம் 27ஆம் திகதி சேர்க்கப்பட்ட இளம் தாயான ம. சிந்துஜா பிரசவத்தின் பின்னரான அதிக குருதிப்போக்கால் உயிரிழந்தார். இவரின், உயிரிழப்பு மருத்துவ கவனயீனத்தால் ஏற்பட்டது என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்த நிலையில் இது தொடர்பில் வடக்கு மாகாண சுகாதார அமைச்சால் கடந்த 5ஆம் திகதி 5 பேர் கொண்ட விசாரணைக் குழுவை நியமித்தது.

இந்த விசாரணைக் குழு அன்றைய தினமே மன்னார் மாவட்ட மருத்துவமனைக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்ததுடன் 7ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் கூடி ஆராய்ந்து தமது ஆரம்ப புலன் விசாரணை அறிக்கையை, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலரிடம் கையளித்தது.

விசாரணைக் குழு 12 பேரிடம் வாக்குமூலங்களை பதிவு செய்தது. அத்துடன், 21 ஆவணங்களையும் விசாரணை குழு திரட்டியது. விசாரணைக்குழு தனது அவதானத்தில், சிந்துஜா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டபோது விடுதி இல 5 மற்றும் 6இற்குரிய 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர்கள் அங்கிருக்கவில்லை. விடுதிக்குள் உள்ள 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான அறையிலும் அவர்கள் தங்கியிருக்கவில்லை. அவர்கள் தங்களுக்கான விடுதிகளில் தங்கியிருந்துள்ளார்கள். இந்தச் சம்பவம் நடக்கும் வரையில் 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான கடமைநேர அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

இதேநேரம் இரண்டாவது 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர்கள் எவரும் அங்கு நியமிக்கப்பட்டிருக்கவுமில்லை. தாதிய உத்தியோகத்தர்கள் மற்றும் மருத்துவ மாதுக்கள், சிந்துஜா சேர்க்கப்பட்ட அதிகாலை 2.30 இலிருந்து காலை 7 மணி வரையில் அவரை கண்காணிக்கவில்லை. தாதிய உத்தியோகத்தர், மருத்துவ மாதுக்கள் 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர் வந்து பார்வையிடாத நிலையில், 'ஒன்கோல்' தாதி, ஒன்கோல் மேற்றன், ஒன்கோல் மகப்பேற்று மருத்துவர், மருத்துவமனை பணிப்பாளர் ஆகியோருக்கு எதுவும் தெரியப்படுத்தப்படவில்லை.

விடுதிப் பணியாளர்களிடையே தொடர்பாடல் மோசமான நிலையில் உள்ளது. மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ மாதுக்கள் ஆகியோர் மிக மோசமான எதிர்மறை சிந்தனை உடையவர்களாக உள்ளனர்.

இதேவேளை, வெளிநோயாளர் பிரிவு மருத்துவர் நோயாளியை பார்வையிட வேண்டும் என எழுதியுள்ளமையை தாதிய உத்தியோகத்தர் தெரியப்படுத்திய பின்னரும் 'ஒன்கோல்' மருத்துவ உத்தியோகத்தர் பார்வையிடவில்லை என விசாரணைக் குழு தனது அவதானத்தைக் குறிப்பிட்டுள்ளது.

இதற்கு அமைவாக, சிந்துஜாவின் உயிரிழப்பு தடுக்கப்பட்டிருக்கக் கூடியது என்றும் இந்த உயிரிழப்புக்கு மருத்துவ அலட்சியமே காரணம் என்றும் விசாரணைக் குழு குறிப்பிட்டுள்ளது. அத்துடன், அன்றைய இரவு கடமைக்குரிய மருத்துவ உத்தியோகத்தரான ரந்தெனிய, தாதிய உத்தியோகத்தர்களான விஜயசிங்க, குரூஸ், மருத்துவ மாதுக்களான விஜயரதி செல்வா, ரத்னம் எமில்டா ஆகியோரை விசாரணை முடிவடையும் வரை உடனடியாக குறித்த விடுதியிலிருந்து இடமாற்றம் செய்ய வேண்டும், இவர்கள் 5 பேருக்கும் எதிராக மருத்துவ அலட்சியத்துக்காக தனித்தனியான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட 14 விடயங்களை விசாரணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இதற்கு அமைவாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் கீழ் நியமனம் பெற்றுள்ள தாதிய உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதுக்கள் ஆகியோருக்கு நேற்றிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் தற்காலிக பணி நீக்கக் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்த விசாரணை அறிக்கை கொழும்பு சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், மருத்துவர்களின் நியமனம் கொழும்பு சுகாதார அமைச்சுடன் தொடர்புடையது என்பதால் அவர் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வடக்கு சுகாதார அமைச்சு பரிந்துரைத்துள்ளது.

## ராஜபக்ஷ...

நாளை வெள்ளிக்கிழமை அநுராதபுரம் சல்காது மைதானத்தில் தமது முதல் பிரசார கூட்டத்தில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார். இந்தக் கூட்டத்தில் ராஜபக்ஷ குடும்பத்தை சேர்ந்த ஒருவர் மேடையேறுவார் என்று அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக நாமல் ராஜபக்ஷ களமிறங்கியுள்ள பின்புலத்தில் அவர்களது குடும்பத்தில் பிளவுகள் ஏற்பட்டால் அது நாமல் ராஜபக்ஷவின் வாக்குகளில் மேலும் சரிவை ஏற்படுத்தும் என்று கூறப்படுகின்றது.

இதேநேரம், மகிந்த ராஜபக்ஷவின் மூத்த சகோதரனான சமல் ராஜபக்ஷ, அவரின் புதல்வர் சஷீந்திர ராஜபக்ஷ அண்மைக்காலமாக பொதுஜன பெரமுன சார்ந்த எந்தவோர் நிகழ்விலும் பங்கேற்பதில்லை என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

## ரணில், நாமல்...

தரப்பினர் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இதேவேளை, சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ கொழும்பு - விஜயராமையில் உள்ள மகிந்த ராஜபக்ஷவின் இல்லத்தில் வேட்புமனுவில் ஒப்பமிட்டார்.

இந்த நிகழ்வில், முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ பெரமுன கட்சியின் எம். பிக்கள், ஆதரவாளர்கள் எனப் பலர் பங்கேற்றனர்.

இதேநேரம், முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவும் மத வழிபாடுகளை தொடர்ந்து அவரின் இல்லத்தில் வைத்து வேட்புமனுவில் ஒப்பமிட்டார். இதேபோன்று, மவ்பிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீரவும் வேட்புமனுவில் ஒப்பமிட்டார்.

எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளது. இதில், போட்டியிடும் வேட்பாளர்கள் இன்று காலை 9 மணி முதல் 11 மணி வரையான நேரத்துக்குள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# தமிழ்ப் பொதுவேட்பாளர் கோஷத்தை வடக்கு - கிழக்குக்குள் வைத்துக்கொள்க!

## வெளியே அது வேண்டாம் என்கிறார் மனோ



கொழும்பு, ஒக. 15

**"தமிழ் பொது வேட்பாளர் விவகாரத்தை வடக்கு, கிழக்குக்குள் வைத்துக்கொள்ளுங்கள், அந்த கோரிக்கையுடன் வடக்கு, கிழக்குக்கு வெளியே வந்துவிடவேண்டாம், அவ்வாறு வந்தால் அதனை எதிர்ப்போம்." - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

தமிழ் பொதுவேட்பாளர் விவகாரம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு-

தமிழ் பொதுவேட்பாளர் புது வேட்பாளராக இருப்பார் என எதிர்பார்த்தேன். ஆனால் அவர் பழைய வேட்பாளர்தான். இந்த முயற்சியை நான் அதிகாரபூர்வமாக எதிர்க்கவில்லை. அத்தகைய பொதுவேட்பாளரை நிறுத்தக்கூடிய உரிமை தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு இருக்கின்றது. இதனை அங்குள்ள கட்சிகள் எதிர்ப்பதற்கும் உரிமை இருக்கின்றது. அந்தவகையில் பொதுவேட்பாளர் முயற்சி எதிர்க்கப்படுவதையும் நாம் அங்கீகரிக்கின்றோம், ஆதரிக்கப்படுவதையும் அங்கீகரிக்கின்றோம்.

எனினும், வடக்கு, கிழக்குக்கு வெளியில் மட்டும் அந்த கோஷத்துடன் வந்துவிடாதீர்கள் என்று தான் சொல்கின்றோம். அவ்வாறு வந்தால் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் வடக்கு, கிழக்குக்கு வெளியில் வாழும் மக்களுக்கு அது சந்தோஷமான விடயமாக அமையாது.

தமிழ் பொதுவேட்பாளர் விவகாரத்தில் பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளார் என்ற குற்றச்சாட்டு கொழும்பில் முன்வைக்கப்பட்டது. இதனை நான் கூறவில்லை, சில ஊடகங்களில்கூட தகவல்கள் வெளியாகின - என்றார். (அ)

# மருத மடு அன்னையின் ஆவணி திருவிழா இன்று!



மன்னார், ஒக. 15

மன்னார் மருதமடு அன்னையின் ஆவணி மாதத் திருவிழாவில் நாட்டின் அனைத்து பாகங்களில் இருந்தும் கலந்துகொள்ளும் பக்தர்களின் நலனை கருத்தில் கொண்டு சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகி உள்ளதாக மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்று வியாழக்கிழமை மடு அன்னையின் ஆவணி மாத திருவிழா இடம்பெறும். வழமை போல் திருவிழா திருப்பலி 15 ஆம் திகதி காலை 6.15 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். ஆவணி திருவிழாவையொட்டி வழமை போல் போக்குவரத்து, பாதுகாப்பு, நீர் வசதிகள், மின்சார வசதி, உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

எனவே இம்முறை திருவிழா திருப்பலி சிலாப மறை மாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி விமல் சிறி ஜயசூரிய ஆண்டகை தலைமையில், நானும், மன்னார் மறை மாவட்டக் குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார்,ஏனைய அருட்தந்தையர்கள் இணைந்து கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுக்கப்படும்.

ஏனைய மாவட்டங்களின் துறவிகள், அருட்பணியாளர்கள் இக்கூட்டு திருப்பலியில் கலந்து கொள்வார்கள்.

திருவிழா திருப்பலியை தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச்சொரூப பவனியும், அதனைத் தொடர்ந்தும் திருச்சொரூப ஆசிர்வாதமும் வழங்கப்படும் - என்றார். (அ)

# பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்க உத்தரவிட கோரி உயர் நீதிமன்றில் மனு

கொழும்பு, ஒக. 15

பதில் பொலிஸ்மா அதிபர் ஒருவரை நியமிப்பதற்கான உத்தரவை ஜனாதிபதி பிறப்பிக்கவேண்டுமெனக் கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி ஆர்.எஸ்.பி. ரணசூரிய அந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில் பிரதிவாதிகளாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர். (அ)

# நாளையுடன் பாடசாலைகளுக்கு இரண்டாம் தவணை விடுமுறை!

கொழும்பு, ஒக. 15

அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில், இரண்டாம் தவணை நிறைவடைவது தொடர்பாக கல்வி அமைச்சினால் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டு அரச பாடசாலைகள் மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளில் சிங்கள மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கான இரண்டாம் தவணை எதிர்வரும் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையும் என அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மூன்றாம் பாடசாலைத் தவணைக்கான முதல் கட்டம் 26 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும் என கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# சம்பள அதிகரிப்பு யோசனைகளில் அரசியல் நோக்கம் எதுவும் இல்லை!

## நிதி இராஜாங்க அமைச்சர் கூறுகிறார்

கொழும்பு, ஒக. 15

அரச உத்தியோகத்தர்களின் வேதன அதிகரிப்பு தொடர்பான யோசனைகளில் அரசியல் நோக்கமில்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முடிந்தவரையில் மக்களுக்கு அதிகபட்ச நிவாரணங்களை வழங்கவே அரசாங்கம் செயற்பட்டு வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் உதய செனவிரத்ன தலைமையில் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு வழங்கிய பரிந்துரைகள் மற்றும் தீர்மானங்களின் அடிப்படையில் இந்த பிரேரணைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டார். (அ)

# பெரமுனவின் அதிகாரத்தை எளிதில் கைப்பற்றமுடியாது!

## சவால் விடுக்கிறார் இந்திக்க அனுருத்த

கொழும்பு, ஒக. 15

பொதுஜன பெரமுன கட்சியின் அதிகாரத்தை அவ்வளவு எளிதில் கைப்பற்றிவிடமுடியாது என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான இந்திக்க அனுருத்த தெரிவித்தார்.

மொட்டு கட்சி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, தேர்தலின் பின்னர் மொட்டு கட்சியை, ஜனாதபிதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ள தமது அணி கைப்பற்றும் என எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ள விடயம் தொடர்பில் கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளித்த இந்திக்க அனுருத்த கூறியவை வருமாறு-

புதிய சக்தியொன்றை கட்டியெழுப்புவதாகக் கூறிவிட்டே கட்சியிலிருந்து சென்றனர், அவ்வளவு எளிதில் மொட்டு கட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிவிட முடியாது, நாமும் அரசியலில்தான் இருக்கின்றோம், முடிந்தால் கைப்பற்றி காட்டட்டும், இவ்வாறு சொல்வபர்கள் கடைசியில் மொட்டு கட்சியில் வந்துதான் சரணடைவார்கள்.

கட்சியின் தீர்மானத்துக்கு எதிராக செயற்படும் உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும். மனுஷ நாணயக்கார, ஹரின் பெர்ணான்டோ ஆகியோர் தொடர்பில் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மதிக்கின்றோம். இவர்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி எடுத்த நடவடிக்கை வரவேற்கத்தக்கது. கட்சி கொள்கைகளுக்கு எதிராக செயற்படும் தரப்புகளுக்கு அனைத்து கட்சிகளும் இவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். (அ)

# மூடப்பட்டது சிகிரியா!

கொழும்பு, ஒக. 15

குளவி தாக்குதல் காரணமாக சிகிரியா உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

நேற்று பிற்பகல் குளவி தாக்குதலுக்கு உள்ளான வெளிநாட்டவர்கள் உட்பட 25 சுற்றுலாப் பயணிகள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் 08 பேரைத் தவிர ஏனையவர்கள் சிகிச்சை பெற்று வைத்தியசாலையை விட்டு வெளியேறியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# கொழும்பு துறைமுக நகரத்தில் பாடசாலை, பல்கலைக்கழகம்!

கொழும்பு, ஒக. 15

கொழும்பு துறைமுக நகரத்தில் திட்டமிடப்பட்டுள்ள அபிவிருத்திக்காக, காணிகளைக் குத்தகைக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்ட செயற்பாட்டுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

இதற்கமைய கொழும்பு துறைமுக நகரத்தில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் வைத்தியசாலையின் அபிவிருத்திக்காக காணிகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டத்தின் 6(1) (சி) பிரிவின் விதிகளின் படி மருத்துவமனை, பாடசாலை மற்றும் பல்கலைக்கழகத்திற்கான காணிகளைகுத்தகைக்கு வழங்குவதற்கான ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்கான அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. (அ)

# முட்டை விலை வீழ்ச்சி!

கொழும்பு, ஒக. 15

நாட்டில் முட்டை விலைகளில் பாரிய வீழ்ச்சி ஏற்பட ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முட்டை இறக்குமதிக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதே இதற்கு காரணம் எனக் கூறப்படுகிறது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த வர்த்தகர்கள், முட்டை உற்பத்தி மற்றும் இறக்குமதிகளால் முட்டைகளின் விலைகள் வீழ்ச்சியுறத் தொடங்கியுள்ளன -என்றனர்.

பண்டிகைக் காலங்களை கருத்திற்கொண்டு முட்டைகளின் விலைகளைக் குறைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org